# Padasalai's
## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

# செலக்சன்

## 7

# தமிழ்

கற்றவரே
கண்ணுடையவர்

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# செலக்சன்

## ஏழாம் வகுப்பு

## 7

## தமிழ்

புதிய பதிப்பு
முப்பருவங்களும்
இணைந்தது

முதல் பருவம் + இரண்டாம் பருவம் + மூன்றாம் பருவம்

94430 43338
94430 46662
வெளியிடுபவர்
அன்பு நிலையம்
15, புதுமண்டபம், மதுரை-625001.

விலை ₹140

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# முதல் பருவம்

## பொருளடக்கம்


| வ.எண் | பொருண்மை/ இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | மொழி அமுதத் தமிழ் | மனப்பாடப்பகுதி *<br>1.1 எங்கள் தமிழ் *<br>1.2 ஒன்றல்ல இரண்டல்ல<br>1.3 பேச்சு மொழியும் எழுத்து மொழியும்<br>1.4 சொலவடைகள்<br>1.5 குற்றியலுகரம், குற்றியலிகரம்<br>1.6 மொழியை ஆள்வோம்<br>1.7 மொழியோடு விளையாடு | |
| 2 | இயற்கை அணிநிழல் காடு | 2.1 காடு *<br>2.2 அப்படியே நிற்கட்டும் அந்த மரம்<br>2.3 விலங்குகள் உலகம்<br>2.4 இந்திய வனமகன்<br>2.5 நால்வகை குறுக்கங்கள்<br>2.6 மொழியை ஆள்வோம்<br>2.7 மொழியோடு விளையாடு<br>2.8 திருக்குறள் * | |
| 3 | நாடு, சமூகம் நாடு அதை நாடு | 3.1 புலிதங்கிய குகை *<br>3.2 பாஞ்சை வளம்<br>3.3 தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்<br>3.4 கப்பலோட்டிய தமிழர்<br>3.5 வழக்கு<br>3.6 மொழியை ஆள்வோம்<br>3.7 மொழியோடு விளையாடு | |
| | | | |


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# இரண்டாம்பருவம்


| வ.எண் | பொருண்மை/ இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | அறிவியல் தொழில் நுட்பம் அறிவியல் ஆக்கம் | மனப்பாடப்பகுதி *<br>1.1 கலங்கரை விளக்கம் *<br>1.2 கவின்மிகு கப்பல்<br>1.3 தமிழரின் கப்பற்கலை<br>1.4 ஆழ்கடலின் அடியில்<br>1.5 இலக்கியவகைச் சொற்கள்<br>1.6 மொழியை ஆள்வோம்<br>1.7 மொழியோடு விளையாடு | |
| 2 | கல்வி ஒதுவது ஒழியேல் | 2.1 இன்பத்தமிழ்க் கல்வி<br>2.2 அழியாச் செல்வம் *<br>2.3 வாழ்விக்கும் கல்வி<br>2.4 பள்ளி மறுதிறப்பு<br>2.5 ஒரெழுத்து ஒரு மொழி,பகுபதம், பகாப்பதம்<br>2.6 மொழியை ஆள்வோம்<br>2.7 மொழியோடு விளையாடு | |
| 3 | கலை, அழகியல், கலை வண்ணம் | 3.1 ஒரு வேண்டுகோள்<br>3.2 கீரைப்பாத்தியும் குதிரையும் *<br>3.3 பேசும் ஓவியங்கள்<br>3.4 தமிழ் ஒளிர் இடங்கள்<br>3.5 தொழிற்பெயர்<br>3.6 மொழியை ஆள்வோம்<br>3.7 மொழியோடு விளையாடு<br>3.8 திருக்குறள் * | |
| | | | |


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மூன்றாம்பருவம்



| வ.எண் | பொருண்மை/ இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | நாகரிகம்<br>தொழில்<br>வணிகம்<br>நயத்தகு<br>நாகரிகம் | மனப்பாடப்பகுதி *<br>1.1 விருந்தோம்பல்<br>1.2 வயலும் வாழ்வும்<br>1.3 திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி<br>1.4 திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்<br>1.5 அணி இலக்கணம்<br>1.6 மொழியை ஆள்வோம்<br>1.7 மொழியோடு விளையாடு | |
| 2 | அறம்,<br>தத்துவம்,<br>சிந்தனை<br>ஒப்புரவு<br>ஒழுகு | 2.1 புதுமை விளக்கு *<br>2.2 அறம் என்னும் கதிர் *<br>2.3 ஒப்புரவு நெறி<br>2.4 உண்மை ஒளி<br>2.5 அணி இலக்கணம்<br>2.6 மொழியை ஆள்வோம்<br>2.7 மொழியோடு விளையாடு<br>2.8 திருக்குறள் * | |
| 3 | மனிதம்,<br>ஆளுமை<br>மானுடம்<br>வெல்லும் | 3.1 மலைப் பொழிவு<br>3.2 தன்னை அறிதல்<br>3.3 கண்ணியமிகு தலைவர்<br>3.4 பயணம்<br>3.5 ஆகுபெயர்<br>3.6 மொழியை ஆள்வோம்<br>3.7 மொழியோடு விளையாடு | |
| | | | |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## இயல் மூன்று — 3. நாடு அதை நாடு

### கவிதைப்பேழை

## இயல் மூன்று — 3.1. புலி தங்கிய குகை

**மனவரைபடம்**

புலி தங்கிய குகை
↓
வீரத்தாய்
↓
மகன் பிறந்த வயிறு | புலி தங்கிய குகை

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. " யாண்டு " என்னும் சொல்லின் பொருள் .........**

அ) எனது ஆ) எங்கு
இ) எவ்வளவு ஈ) எது **விடை : ஆ) எங்கு**

**2." யாண்டுளனோ ? " என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .**

அ) யாண்டு + உளனோ ? ஆ) யாண் + உளனோ ?
இ) யா + உளனோ ? ஈ) யாண்டு + உனோ ? **விடை : அ) யாண்டு + உளனோ ?**

**3. " கல் + அளை " என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்..................**

அ) கல்லளை ஆ) கல்அளை
இ) கலலளை ஈ) கல்லுளை **விடை : அ) கல்லளை**

---

**குறுவினா**

**தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார் ?**

தம் வயிற்றுக்குத் தாய் புலி தங்கிச் செல்லும் குகையை உவமையாகக் கூறுகிறார்.

---

**சிறுவினா**

**தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

* சிறு அளவிலான எம் வீட்டின் தூணைப் பற்றிக் கொண்டு,
ஏதும் அறியாதவள் போல நீ. " உன் மகன் எங்கே ?" என என்னைக் கேட்கிறாய்.

* அவன் எங்குள்ளான் என்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் புலிதங்கிச் சென்ற குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு என்னிடம் உள்ளது. அவன் இங்கில்லை எனில் போர்க்களத்தில் இருக்கக்கூடும், போய்க் காண்பாயாக என்று தாய் கூறினார்.

---

**சிந்தனை வினா**

**தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன் ?**

**தாயின் வயிறு = புலிதங்கிச் சென்ற குகை**

* இப்பாடலில் வீரத்தாய் தன் மகனை வீரத்தில் சிறந்த புலியோடு ஒப்பிடுகிறாள்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



* புலியானது தனது குகையிலிருந்து வெளியே செல்லும்போது இறையினை வேட்டையாடச் செல்லும்
* அதுபோல எனது மகன் என் வயிற்றிலிருந்து பிறந்ததே எதிரி நாட்டு படைகளை வேட்டையாடதான் என்ற பொருள் தரும்வகையில் இப்பாடலை அமைத்துள்ளார்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. சிற்றில் என்பதன் பொருள் யாது ?**

அ) பெரிய வீடு ஆ) கற்குகை
இ) சிறு வீடு ஈ)மரப்பொந்து **விடை : இ) சிறு வீடு**

**2. கல் அளை என்பதன் பொருள் யாது ?**

அ) மாடி வீடு ஆ) கற்குகை
இ) கூரை வீடு ஈ) மரப்பொந்து **விடை : ஆ) கற்குகை**

**3. ஈன்ற வயிறு என்பதன் பொருள் யாது ?**

அ) கல்அளை ஆ) யாண்டு
இ)சிற்றில் ஈ) பெற்றெடுத்த வயிறு **விடை : ஈ) பெற்றெடுத்த வயிறு**

**1. காவற்பெண்டு ஆசிரியர் குறிப்பு தருக.**

**காவற்பெண்டு ஆசிரியர் குறிப்பு :–**

சங்ககாலப் பெண்பாற்புலவர்களுள் ஒருவர்.

★ இவர் சோழ மன்னன் போரவைக் கோம்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாயாக விளங்கியவர்

★ கல்வியில் தேர்ச்சியும் கவிபாடும் ஆற்றலும் மிக்கவர்.

★சங்க கால மக்களின் வீரத்தைக் கரும்பொருளாகக் கொண்டு புறநானூற்றுப் பாடல் ஒன்றை பாடியுள்ளார்.

**2. புறநானூறு நூற்குறிப்பு தருக**

**புறநானூறு நூற்குறிப்பு :–**

புறநானூறு என்னும் தொகைநூல் நானூறு பாடல்களைக் கொண்ட புறத்திணை சார்ந்த ஒரு சங்கத் தமிழ் நூலாகும்.

★ புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும்.

★ அடிவரையறை 4 அடி முதல் 40 அடி வரை.

★ அக்காலத் தமிழ் மக்களின் அரசியல் சமூகம், பொருளாதாரம், கல்வி, நாகரீகம், கலை வளர்ச்சி, வீரம், கொடை, ஆடை, அணிகலன், பழக்க வழக்கங்கள், வாணிபம் போன்ற பல செய்திகளைப் புறநானூறு வழி அறியலாம்.

★ இதனை ஜி.யு.போப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**கற்பவை கற்றபின்**

**1. சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை அறிந்து எழுதுக.**

அஞ்சியத்தை மகள் நாகையார்,அள்ளூர் நன் முல்லையார்,
ஆதிமந்தி, இளவெயினி யார், ஒக்கூர் மாசாத்தியார்,
ஔவையார், காக்கைப் பாடினியார், காவற்பெண்டு
குறமகள் குறிஎயினி, முடத்தாமக் கண்ணியார் நக்கண்ணையார்,
நப்பசலையார், நல்வெள்ளியார்,

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. பண்டைக்காலப் போர்க்கருவிகள் சிலவற்றைப் படம் வரைந்து அவற்றின் பெயர்களை எழுதுக.**



வாள்



ஈட்டி


---

**இயல் மூன்று**

## கவிதைப்பேழை

## 3.2. பாஞ்சை வளம்

**மனவரைபடம்**




---

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஊர்வலத்தின் முன்னால் .......... அசைந்து வந்தது**
அ) தோரணம் ஆ) வானரம்
இ) வாரணம் ஈ) சந்தனம் **விடை : இ) வாரணம்**

**2. பாஞ்சாலங்குறிச்சியில் ............. நாயை விரட்டிடும்**
அ) முயல் ஆ) நரி
இ) பரி ஈ) புலி **விடை : அ) முயல்**

**3. மெத்தை வீடு என்று குறிப்பிடப்படுவது .............**
அ) மெத்தை விரிக்கப்பட்ட வீடு
ஆ) படுக்கையறை உள்ள வீடு
இ) மேட்டுப்பகுதியில் உள்ள வீடு
ஈ) மாடி வீடு **விடை : ஈ) மாடி வீடு**

**4."பூட்டுக்கதவுகள்"என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............**
அ) பூட்டு + கதவுகள் ஆ) பூட்டும் + கதவுகள்
இ) பூட்டின் + கதவுகள் ஈ) பூட்டிய + கதவுகள் **விடை :ஆ) பூட்டும் + கதவுகள்**

**5."தோரணமேடை"என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............**
அ) தோரணம் + மேடை ஆ) தோரண + மேடை
இ) தோரணம் + ஒடை ஈ) தோரணம் +ஒடை **விடை :அ) தோரணம் + மேடை**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**6. "வாசல் + அலங்காரம்" என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............**

அ) வாசல்அலங்காரம் ஆ) வாசலங்காரம்
இ) வாசலலங்காரம் ஈ) வாசலிங்காரம் **விடை : இ) வாசலலங்காரம்**

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. பொக்கிஷம் | – | அழகு |
| 2. சாஸ்தி | – | செல்வம் |
| 3. விஸ்தாரம் | – | மிகுதி |
| 4. சிங்காரம் | – | பெரும் பரப்பு |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1. பொக்கிஷம்** | – | **செல்வம்** |
| **2. சாஸ்தி** | – | **மிகுதி** |
| **3. விஸ்தாரம்** | – | **பெரும் பரப்பு** |
| **4. சிங்காரம்** | – | **அழகு** |

**குறுவினா**

**1. பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக.**

பாஞ்சாலங்குறிச்சியைச் சுற்றிக் கோட்டைகள் அமைக்கப்பட்டிருந்தன. அக்கோட்டைகள் உறுதிபடக் கட்டப்பட்டிருந்தன.

**2. பாஞ்சாலங்குறிச்சியின்இயற்கை வளம் எத்தகையது ?**

பாஞ்சாலங்குறிச்சியில் பூஞ்சோலைகளும் சந்தன மலர்ச் சோலைகளும் ஆறுகளும் நெல் வயல்களும் பாக்குத் தோப்புகளும் உண்டு. சோலைகளில் குயில்கள் கூவும், மயில்கள் நாட்டின் வளத்தைக் கூறி விளையாடும்.

**சிறு வினா.**

**1. பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருக்கும் ?**

★ பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள்தோறும் மணிகளால் அழகு செய்யப்பட்ட மேடைகள் இருக்கும்.
★ வீடுகள் எல்லாம் மதில்களால் சூழப்பட்ட மாடி வீடுகளாய் இருக்கும்.
★ வீட்டுக்கதவுகள் மிகவும் நேர்த்தியாகவும் வீடுகள் செல்வம் நிறைந்தவையாகவும் இருக்கும்.

**2. பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள்பற்றி எழுதுக.**

★ வீரம் மிகுந்த நாடாகிய பாஞ்சாலங்குறிச்சியில் வாழும் முயல், தன்னை வேட்டையாட வரும் தன்னினும் வலிமை மிகுந்த நாயையும் எதிர்த்து நின்று போராடி விரட்டிவிடும்.
★ சாந்தமான பசுவும், கொல்லும் இயல்பினதாகிய புலியும் ஒரே நீர்த்துறையில் நின்று பால் போன்ற தண்ணீரைக் குடிக்கும்.
★ கட்டபொம்மன் பெயரைச்சொல்லி ஓர் இடத்தில் கறந்த பாலினை வைத்தால் காகங்கூட அதைப் பருக முனையாது.
★ இவையாவும் பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் ஆகும்.

**சிந்தனை வினா.**

**நாட்டுப்புறக் கதை பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படக் காரணம் என்ன ?**

**காரணம் :**

★ கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்தான்.
★ வரிகொடுக்க மறுத்தான், போரிட்டான், தூக்கிலிடப்பட்டான்.
★ அதனால் நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படுகிறான்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. "பரி" என்ற சொல்லின் பொருள்...........**

அ) நரி ஆ) குதிரை
இ) யானை ஈ) பூனை **விடை : ஆ) குதிரை**

**2. "கமுகு" என்பது யாது ?**
அ) கழுகு ஆ) தென்னை
இ) பாக்கு ஈ) மட்டை **விடை : இ) பாக்கு**

**3. "பாஞ்சை" என்பது............**
அ) பஞ்சசீலம் ஆ) பாஞ்சசீலம்
இ) கள்ளக்குறிச்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி **விடை : ஈ) பாஞ்சாலங்குறிச்சி**

**குறுவினா**

**1. கட்டபொம்மன் கொலு வீற்றிருந்த காட்சியைக் கூறுக.**

அரண்மனை வாயில் முறைப்படி அழகுபடுத்தப்பட்டிருக்கும். அழகு மிகுந்த அரசனாகிய கட்டபொம்மன் அரசவையில் வீற்றிருப்பான்.

## கற்பவை கற்றபின்

**உங்கள் வீட்டில் உள்ள பெரியோரிடம் நாட்டுப்புறக் கதைப் பாடல்களைக் கேட்டு வந்து வகுப்பறையில் பகிர்க.**

**தேசிங்குராஜன் கதை**

டாறு டாறாய்க் கிழித்துப் போடுவேன்
சிற்றப்ப ராசாவே
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
சிற்றப்ப ராசாவே
வந்தவன் ஆரென்று கேட்டுப்பாரு


ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்னைப் பெற்றதாயே
இரணகளத்தில் செத்துப்போனால் நல்ல பதவியுண்டு
கத்திமுனையில் சாவேனானால் கனத்த பதவியுண்டு
வைகுந்த பதவி அடைந்தார்க ஐயா ராஜாவும் ராணியும்
அரங்கர்பதம் சேர்ந்தானையா ராஜா தேசிங்கு

## உரைநடை உலகம்

**இயல் மூன்று**

## 3.3. தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

**மனவரைபடம்**



www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. முத்துராமலிங்கத் தேவர் முதன்முதலில் உரையாற்றிய இடம் ..........**

அ) தூத்துக்குடி ஆ) காரைக்குடி

இ) சாயல்குடி ஈ) மன்னார்குடி **விடை : இ) சாயல்குடி**

**2. முத்துராமலிங்கத் தேவர் நடத்திய இதழின் பெயர் ..........**

அ) இராஜாஜி ஆ) நேதாஜி

இ) காந்திஜி ஈ) நேருஜி **விடை : ஆ) நேதாஜி**

**3. தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்டியவர் ............**

அ) இராஜாஜி ஆ) பெரியார்

இ) திரு.வி.க. ஈ) நேதாஜி **விடை : இ) திரு.வி.க.**

---

**குறுவினா**

**1. முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்டி பெரியார் கூறியது யாது ?**

முத்துராமலிங்கத் தேவர் வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையும் விவேகப் பேச்சால் எத்தனையோ அறிவாளிகளையும் உண்டாக்கியவர். உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் தனித்துணிச்சல் பெற்றவர். "சுத்தத் தியாகி" எனப் பெரியார் பாராட்டினார்.

---

**2. முத்துராமலிங்கத் தேவர் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடை விதிக்கப்படக் காரணம் யாது ?**

மேடைகளில் தேவர் ஆற்றிய வீர உரையைக் கேட்ட மக்கள் ஆங்கில அரசுக்கெதிராய் வீறு கொண்டு எழுந்தனர். அதனால் அச்சமடைந்த அரசு, மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என முத்துராமலிங்கத் தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் வாயிலாய்த் தடை விதித்தது.

---

**3. முத்துராமலிங்கத் தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப்பற்றி எழுதுக.**

முத்துராமலிங்கத் தேவர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் சொற்பொழிவாற்றும் திறம் பெற்றவர். சிலம்பம், குதிரையேற்றம், துப்பாக்கியால் சுடுதல், சோதிடம், மருத்துவம் போன்ற பல துறைகளிலும் ஆற்றல் கொண்டவராய் விளங்கினார்.

---

**சிறுவினா.**

**1. நேதாஜியுடன் முத்துராமலிங்கத் தேவர் கொண்ட தொடர்பு பற்றி எழுதுக.**

★ முத்துராமலிங்கத் தேவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

★ அவரைத் தம்முடைய அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.

★ முத்துராமலிங்கத் தேவரின் அழைப்பை ஏற்றுக் கி.பி (பொ.ஆ) 1939 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் ஆறாம் நாள் நேதாஜி மதுரைக்கு வருகை தந்தார்.

★ நேதாஜி தொடங்கிய இந்தியத் தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத் தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர்.

★ விடுதலைக்குப்பின் நேதாஜி என்னும் பெயரில் வார இதழ் ஒன்றையும் தேவர் நடத்தினார்.

---

**2. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத் தேவர் செய்த தொண்டுகள் யாவை ?**

★ 1938 ஆம் ஆண்டு காலகட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராய் முத்துராமலிங்கத் தேவர் திகழ்ந்தார்.

★ மதுரையிலிருந்த நூற்பு ஆலை ஒன்றில் வேலைசெய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப.ஜீவானந்தம் போராடினார்.

★ முத்துராமலிங்கத் தேவர் அவருடன் இணைந்து 1938 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார். அதற்காக ஏழு திங்கள் சிறைத்தண்டனை பெற்றார்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



★ உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப்பெரிய அளவிலானமாநாடு ஒன்றை நடத்தினர்.
★ பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார்.

**சிந்தனை வினா.**
**சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள் ?**
**சிறந்த தலைவருக்குரிய பண்புகள் என நான் கருதுவன :**
★ நாட்டுப்பற்று
★ துணிவு
★ பேச்சாற்றல்
★ சாதி வேற்றுமை கருதாமை
★ இறைப்பற்று
★ நேர்மை
★ கொடைத்தன்மை
★ தொண்டர்களை மதித்தல்
★ ஒழுக்கம்

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
**1. முத்துராமலிங்கத் தேவரின் கல்வி தடைபடக் காரணம் ............ நோய்**
அ) காய்ச்சல் ஆ) பிளேக்
இ) பெரியம்மை ஈ) காலரா **விடை : இ) பிளேக்**
**2. பாரதமாதா கூட்டுறவு பண்டகசாலையை நிறுவியர்.......... ஆகும்.**
அ) காமராசர் ஆ) இராஜாஜி
இ) சத்தியமூர்த்தி ஈ) முத்துராமலிங்கத் தேவர் **விடை : ஈ) முத்துராமலிங்கத் தேவர்**
**3. முத்துராமலிங்கத் தேவரின் அரசியல் குரு..........**
அ) நேரு ஆ) நேதாஜி
இ) மகாத்மா காந்தி ஈ) வல்லபாய் படேல் **விடை : ஆ) நேதாஜி**

**குறுவினா**
**1. முத்துராமலிங்கத் தேவர் எங்குப் பிறந்தார் ? அவர் பெற்றோர் யாவர் ?**
★ முத்துராமலிங்கத் தேவர் கி.பி 1908 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முப்பதாம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பசும்பொன் என்னும் ஊரில் செல்வச் செழிப்பு மிகுந்த குடும்பத்தில் பிறந்தார்.
★ அவர் பெற்றோர் உக்கிரபாண்டியத் தேவர் – இந்திராணி அம்மையார்.

**2. முத்துராமலிங்கத் தேவரின் சிறப்புப் பெயர்கள் யாவை ?**
★ முத்துராமலிங்கத் தேவரின் சிறப்புப் பெயர்கள்:
★ தேசியம் காத்த செம்மல்
★ வித்தியாபாஸ்கர்
★ பிரவசனகேசரி
★ சன்மார்க்க சண்டமாருதம்
★ இந்துபுத்த சமய மேதை ஆகும்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிறுவினா.**

**1. விவசாயிகள் தோழர் முத்துராமலிங்கத் தேவர் – விளக்குக**

★ முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் ஜமீன் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தி விவசாயிகள் துயர் துடைக்கப் பாடுபட்டார்.

★ உழுபவர்களுக்கே நிலம் என்றார்.

★ தமக்குச் சொந்தமாய் 32 1/2 சிற்றூர்களில் இருந்த விளைநிலங்களைக் குத்தகை இல்லாமல், உழுபவர்க்கே பங்கிட்டுக் கொடுத்தார்.

★ அவற்றை ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அளித்து மகிழ்ந்தார்.

★ கமுதியில் வியாபாரிகள் விவசாய உற்பத்திப் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

★ முத்துராமலிங்கத் தேவர் பாரதமாதா கூட்டுறவுப் பண்டகசாலையை ஏற்படுத்தி விவசாயிகளின் விளைபொருள்களுக்குச் சரியான விலை கிடைக்கச் செய்தார்.

## கற்பவை கற்றபின்

**நாட்டுக்கு உழைத்த சிறந்த தலைவர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதுக.**

**தந்தை பெரியார் :**

★ தந்தை பெரியார் இராமசாமி அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சீர்திருத்தச் செம்மல். அவர் பிறந்த ஊர் ஈரோடு. அவருடைய பெற்றோர் வேங்கடப்ப நாயக்கர், சின்னத்தாயம்மாள். அவர் பிறந்த நாள் 17.09.1879.

★ இளமையிலிருந்தே சீர்திருத்தச் சிந்தனை உடையவராய் ஈ.வே.ரா. விளங்கினார். அவர் தமிழ்ச் சமூகத்தில் சாதி வேற்றுமை ஒழிய அரும்பாடுபட்டார்.

★ காங்கிரசுக் கட்சியில் சேர்ந்து நாட்டு விடுதலைக்கு உழைத்தார்.

★ அண்ணல் காந்தியடிகளின் கட்டளையை ஏற்றுக் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்.

★ வைக்கம் என்னும் ஊரில் ஒரு தெருவில் தாழ்த்தப்பட்டோர் நுழையத் தடை இருந்தது.

★ பெரியாரின் தலைமையில் கிளர்ச்சி நடந்தது. பெரியாரின் போராட்டம் வெற்றி பெற்றது.

★ அப்போது முதலாக "வைக்கம் வீரர்" என அழைக்கப்பட்டார்.

★ கல்வி, பெண் விடுதலை போன்றவற்றிலும் பெரியாருடைய பணிகள் பெருமையும், அருமையும் வாய்ந்தவை.

**அன்னிபெசண்ட் அம்மையார் :**

★ இங்கிலாந்து நாட்டில் இலண்டன் நகரில் வில்லியம் பேஜ்உட், எமிலி மோரிஸ் இணையருக்கு மகளாய் 1.10.1847 இல் பிறந்தவர் அன்னிபெசண்ட்.

★ பெசண்ட் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர்.

★ 1875 ஆம் ஆண்டில் "ஒழுக்கத்தின் உண்மையான அடிப்படை" என்னும் தலைப்பில் அவர் பேசிய பேச்சு அவர்க்குப் புகழ் சேர்த்தது.

★ தொழிற்சங்கப் போராட்டங்களில் கலந்து கொண்டார்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



விரிவானம்

இயல் மூன்று

## 3.4. கப்பலோட்டிய தமிழர்

மனவரைபடம்

கப்பலோட்டிய தமிழர்

↓

வ.உ.சிதம்பரனார்

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 05.09.1872 |
| பிறந்த இடம் | : | ஒட்டப்பிடாரம் |
| மாவட்டம் | : | தூத்துக்குடி |
| மரபு | : | சைவ வெள்ளாளர் |
| பெற்றோர் | : | உலகநாத பிள்ளை, பரமாயி அம்மாள் |
| இறப்பு | : | 18.11.1936 |

## மதிப்பீடு

**வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.**

இந்தியக் கடலாட்சி எமதே எனக் கருதி இறுமாந்திருந்த ஆங்கிலேயர் பொறி கலங்கி நெறிமயங்கச் செய்தவர் நமது கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். தூத்துக்குடி துறைமுகத்தில் அவரின் உரைபின்வருமாறு.

அன்று கொற்கை துறைமுகத்தில் பாண்டியரின் மீன் கொடி பறந்தது. முத்துவளம் கொழித்தது. அன்று நம்மவர்கள் வாணிகம் செய்தனர்.

இன்று ஆங்கிலேயரின் கொடி உள்ளது. இன்றோ முத்துவளம் கொழிக்கவில்லை. இன்று ஆங்கிலேயர் வாணிகம் செய்கின்றனர். நம்மவர்கள் கூலி வேலை செய்கின்றனர்.

அதற்காக துறைமுகத்தில் சுதேசக் கப்பல் கம்பெனி ஒன்று உருவாயிற்று அதன் தலைவராக பாண்டித்துரையார் பொறுப்பேற்றார் அதன் செயலாளனாக வ.உ.சிதம்பரனார் பொறுப்பேற்றார். சுதேசிக் கப்பல் முதல்முதலாக கொழும்பு துறைமுகம் சென்றது. சுதேசிக் கப்பல் வாணிகம் வளர்ந்தது.

இதைப்பொறுக்காத வெள்ளையர்கள் வ.உ.சிதம்பரனாரை சுதேசிக் கம்பெனியில் இருந்து விலக நூறாயிரம் கையடக்கம் தருவதாகக் கூறினர். அதனை வாங்க அவர் மறுத்ததால் அவரை அடக்குமுறையால் அடக்க அரசாங்கத்தின் உதவியை நாடினர்.

சிதம்பரனாருக்கு இரட்டைத் தீவாந்திர தண்டனை கிடைத்தது. பிறகு அப்பீல் கோர்ட்டிலே சிறைத் தண்டனையாக மாறிற்று. ஆறாண்டு கோவைச் சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலும் கொடும்பணி கொடுக்கப்பட்டது.

சிறையில் ஒருநாள் ஜெயிலர் சிதம்பரனாருக்கு புத்திமதி கூறினான். அதை கேட்ட சிதம்பரனார் கோபப்பட்டு அடே மடையா !
நீயா எனக்கு புத்திமதி சொல்பவன் நான் உன் அப்பனுக்கும் புத்தி சொல்வேன் எனக் கூறினார்.

சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது. செந்தமிழ் என்றார். சிறையில் தொல்காப்பியம் இன்னிலை போன்ற நூல்களை படித்து மகிழ்ந்தார். ஆலன் எழுதிய 'மனம் போல் வாழ்வு'
என்ற ஆங்கில நூலை மொழிபெயர்த்தார் மெய்யறிவு, மெய்யறம் போன்ற நூல்களை இயற்றினார்.

சிறைக்காலம் முடிந்து மீண்டும் துறைமுகம் வந்தார். துறைமுகத்தில் சுதேசிக் கப்பல் இல்லாதது கண்டு மனம் வருத்தமுற்றார். எனினும் இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் சுதந்திரம் வந்தே தீரும். வீரசுதந்திர வெள்ளம் புறப்பட்டு விட்டது. அதைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது என்றார்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சிறுவினா**

**இரா.பி.சேது குறிப்பு தருக.**

| | | |
|---|---|---|
| பெயர் | – | இரா.பி.சேது பிள்ளை |
| பிறப்பு | – | 02.03.1896 |
| மாவட்டம் | – | திருநெல்வேலி |
| சிறப்புப் பெயர் | – | சொல்லின் செல்வர் |
| கல்வி | – | கலைமுதுவர், சட்டஇளவர் |
| சிறப்பு | – | செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டு வந்தவர். |
| பணி | – | வழக்குரைஞர், பேராசிரியர் |
| பணியகம் | – | சென்னைப் பல்கலைக்கழகம் |
| பெற்றோர் | – | பிறவிப்பெருமான் – சொர்ணம் |
| குலம் | – | வேளாளர் |
| பரிசு | – | தமிழின்பன் என்னும் நூலுக்கு சாகித்ய அகாதெமி பரிசு வழங்கப்பட்டது. |

இயற்றிய நூல்கள் – ஆற்றங்கரையினிலே, தமிழ் விருந்து, கடற்கரையினிலே, தமிழகம் – ஊரும்பேரும், மேடைப்பேச்சு

## கற்பவை கற்றபின்

**பாரதியார், கொடிகாத்த குமரன் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவராக உங்களைக் கற்பனை செய்து கொண்டு வகுப்பில் உரையாற்றுக.**

**பாரதியார் :–**

வணக்கம், என்பெயர் மகதி நான் ஏழாம் வகுப்பு படிக்கிறேன் நான் இன்று பாரதியாக என்னை கற்பனை செய்து கொள்கிறேன்.

**ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்.**

இன்று நாம் அனைவரும் சுதந்திரம் அடைந்து விடுவோம் என்ற ஆனந்தக் கூத்தாடுவோம்.

வீர சுதந்திரம் வேண்டி நின்றார். பின்னர் வேறொன்று கொள்வாரோ ? என்றும் ஆரமுது உண்ணுவதற்கு ஆசைகொண்டார் கல்லில் அறிவைச் செலுத்துவாரோ ? சுதந்திரம் அடைய நினைத்து விட்டோம் இனி வேறெதுவும் மனதில் தோன்ற வில்லை.

சுதந்திரத்தை தண்ணீர் விட்டோ வளர்த்தோம் ? சர்வேசா ? இப்பயிரை கண்ணீர்விட்டே வளர்த்தோம். சுதந்திரம் என்பது. எளிமையாக கிடைக்காது அதற்காக நிறைய கண்ணீரை விட்டுள்ளோம்.

**என்று தணியும் இந்தச்**
**சுதந்திர தாகம் ?**
**என்று மடியும் எங்கள்**
**அடிமையின் மோகம் ?**

இனி நாம் அடிமைகளாக இருக்க வேண்டாம். ஒன்றுபடுவோம். வெற்றி (சுதந்திரம்) பெறுவோம்.

**கொடிகாத்த குமரன்**

வணக்கம் என்பெயர் முகிலன் நான் இன்று கொடிகாத்த குமரன் போல் கற்பனை செய்துள்ளேன்.

இந்தியா சுதந்திரம் அடைய நாம் அனைவரும் ஒன்றுபட்டு போராடுவோம். காவல் துறையே. எங்கள் மீது அடக்குமுறையை கையாளாதே. நீ என் மண்டையை உடைத்தாலும் என் வாயில் இருந்து "வந்தே மாதரம் !" பாரத் மாதாகி ஜெய் ! என்ற சொற்களைத் தவிர வேறு எதுவும் வராது.

என்னை கீழே தள்ளினாலும் என் கையில் உள்ள காங்கிரஸ் கொடியினை மட்டும் நான் கீழே விழ விட மாட்டேன். என் உயிரே சென்றாலும் சுதந்திரம் அடைவது உறுதியே. பாரத்மாதாகி ஜெய் !

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



கற்கண்டு

**இ ய ல் மூன்று**

## 3.5. வழக்கு

**மனவரைபடம்**

**வழக்கு**

- இயல்பு வழக்கு
  1. இலக்கணமுடையது
  2. இலக்கணப்போலி
  3. மரூஉ
- தகுதி வழக்கு
  1. இடக்கரடக்கல்
  2. மங்கலம்
  3. குழூஉக்குறி

**போலி**

1. முதற்போலி
2. இடைப்போலி
3. கடைப்போலி
4. முற்றுப்போலி

**மதிப்பீடு**

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. பந்தர் | – | முதற்போலி |
| 2. மைஞ்சு | – | முற்றுப்போலி |
| 3. அஞ்சு | – | இடைப்போலி |
| 4. அரையர் | – | கடைப்போலி |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. பந்தர் | – | கடைப்போலி |
| 2. மைஞ்சு | – | முதற்போலி |
| 3. அஞ்சு | – | முற்றுப்போலி |
| 4. அரையர் | – | இடைப்போலி |

**குறுவினா**

**1. வழக்கு என்றால் என்ன ?**

எழுத்திலும் பேச்சிலும் சொற்களைப் பயன்படுத்தும் முறை வழக்கு எனப்படும்.

**2. தகுதி வழக்கின் வகைகள் யாவை ?**

தகுதி வழக்கு மூன்று வகைப்படும் அவை :–

1. இடக்கரடக்கல்
2. மங்கலம்
3. குழூஉக்குறி

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. வாழைப்பழம் மிகவும் நஞ்சு விட்டது. – இத்தொடரில் இடம் பெற்றுள்ள போலிச் சொல்லைக் கண்டறிக. அதன் சரியான சொல்லை எழுதுக.**

* வாழைப்பழம் மிகவும் நஞ்சு விட்டது.
* இத்தொடரில் நஞ்சு – என்பது போலிச் சொல்லாகும். இதனை முற்றுப்போலி என்பர்.
* நஞ்சு – நைந்து என்பதே இதன் சரியான சொல் வடிவம்.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. இலக்கணமுடையவை போலவே ஏற்றுக் கொள்ளப்படும் சொற்கள்.......... எனப்படும்.**

அ) இலக்கணமுடையது ஆ) இலக்கணப்போலி
இ) முற்றுப்போலி ஈ) மரூஉ **விடை : ஆ) இலக்கணப்போலி**

**2. பிறரிடம் வெளிப்படையாகச் சொல்லத் தகாத சொற்களைத் தகுதியுடைய வேறு சொற்களால் கூறுவது...............ஆகும்.**

அ) இடக்கரடக்கல் ஆ) மங்கலம்
இ) முதற்போலி ஈ) இடைப்போலி **விடை : அ) இடக்கரடக்கல்**

**3. மங்கலமில்லாத சொற்களை மங்கலமாக கூறுவது.**

அ) இலக்கணப்போலி ஆ) குழூஉக்குறி
இ) மங்கலம் ஈ) இடக்கரடக்கல் **விடை : இ) மங்கலம்**

**4. அஞ்சு என்பது எவ்வகைப் போலி**

அ) முதற்போலி ஆ) இடைப்போலி
இ) கடைப்போலி ஈ) முற்றுப்போலி **விடை : ஈ) முற்றுப்போலி**

**குறுவினா**

**1. போலியின் வகைகள் யாவை ?**

**போலி மூன்று வகைப்படும்**

1. முதற்போலி
2. இடைப்போலி
3. கடைப்போலி

**2. முற்றுப்போலி என்றால் என்ன ?**

ஒரு சொல்லில் இயல்பாக அமைந்த எழுத்துகளுக்குப் பதிலாக எழுத்துகள் அனைத்தும் வேறுபட்டாலும் பொருள் மாறாமல் இருப்பது முற்றுப்போலி எனப்படும்.

**3. கடைப்போலிக்கு எடுத்துக்காட்டு தருக ?**

★ அகம் – அகன்
★ நிலம்– நிலன்
★ முகம் – முகன்
★ பந்தல் – பந்தர்

## கற்பவை கற்றபின்

**மூவகைப் போலிகளிலும் எந்தெந்த எழுத்துகள் எந்தெந்த எழுத்துகளாக மாறுகின்றன என்பதை அறிந்து தொகுக்க.**

**முதற்போலி :–**

**முதற்போலியில் "ப " என்ற சொல் " பை"**
**என்று மாறுகின்றது.**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

பசல்– பைசல்– ப்+அ – ப்+ஐ

ப பை

**இடைப்போலி**

இடைப்போலியில் ( ம = ம்+அ ) என்ற சொல் (மை=ம்+ஐ)என்று மாறுகிறது "அ" கரம் ஐகாரமாக மாறுகிறது.

எ.கா

அமச்சு – அமைச்சு – ம –மை

இலஞ்சி –இலைஞ்சி – ல – லை

அரயர் – அரையர் – ர – ரை

**கடைப்போலி**

அஃறிணைப் பெயர்களின் இறுதியில் நிற்கும் மகர எழுத்திற்குப் பதிலாக னகரம் கடைப்போலியாக வரும். லகர எழுத்திற்குப் பதிலாக ரகரம் கடைப்போலியாக வரும்

எ.கா.

அகம்– அகன் – ம் – ன்

நிலம் – நிலன் – ம் – ன்

முகம் – முகன் – ம் – ன்

பந்தல் – பந்தர் – ல் – ர்

சாம்பல் – சாம்பர் – ல் – ர்

---

## இயல் மூன்று — 3.6 மொழியை ஆள்வோம்

**கேட்க**

**பசும்பொன் முத்துராமலிங்கர் பேச்சின் ஒலிப்பதிவைக் கேட்டு மகிழ்க.**

**கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடம் பேசுக.**

**1. தேசியம் காத்த செம்மல் பசும் பொன் முத்துராமலிங்கர்**

இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் என்னும் ஊரில் 1908 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முப்பதாம் நாள் பிறந்தார். தந்தை உக்கிர பாண்டியனார், தாயார் இந்திராணி அம்மையார். இவர் தம் தொடக்கக் கல்வியை கமுதியிலும், இராமநாதபுரம் அரசு உயர்நிலை பள்ளியில் பத்தாம் வகுப்பும் படித்தார். இவர் இராமநாதபுரத்தில் படித்துக் கொண்டிருந்த போது, அந்நகரில் பிளேக் நோய் பரவியது. அதனால் இவருடைய கல்வியும் நின்றது.

பள்ளிப்படிப்பு நின்றாலும் கேள்வியறிவையும் பட்டறிவையும் மிகுதியாகப் பெற்றார். முத்துராமலிங்கர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழியிலும் வல்லமை பெற்றார். இவர் இளமையிலேயே அரசியலில் ஆர்வங்கொண்டவர். இவர் முப்பத்திரெண்டு சிற்றூர்களில் தமக்கு சொந்தமாக இருந்த நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து மகிழ்ந்தார். சமபந்தி முறைக்கும் ஊக்கமளித்தார். நாடு விடுதலை பெற வேண்டுமெனத் தணியா வேட்கை கொண்டிருந்தார். தமிழகத்தின் சிங்கமானார். இவருடைய பேச்சிலும், மூச்சிலும் விடுதலை உணர்வே மிளிர்ந்தது.

" தேசியம் காத்த செம்மல் " எனத் திரு.வி.கல்யாண சுந்தரனார் இவரைப் பாராட்டியுள்ளார். தம் அரசியல் வாழ்க்கையிலும் முத்துராமலிங்கர் மேன்மை பெற்றிருந்தார். தேர்தலில் போட்டியிட்ட ஐந்து முறையும் வெற்றி வாகையே சூடினார்.

ஐம்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து மக்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட இப்பெருமகனார் 1963 ஆம் ஆண்டு அக்டோபர் முப்பதாம் நாளில் இயற்கை எய்தினார்.

**2. கப்பலோட்டிய தமிழர்**

வ.உ.சி அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கும் ஒட்டப்பிடாரத்தில் செப்டம்பர் 5, 1872 ல்
பிறந்தார். அவரது தந்தை உலகநாதன் பிள்ளை நாட்டின் மிக முக்கியமான வழக்கறிஞர்களுள் ஒருவர். இதுவே தனது கல்வி முடிந்த பிறகு தந்தையின் வழியில் தொடர்ந்து செல்ல ஊக்குவித்தது. தனது தந்தையைப் போல் பணக்காரர்களுக்காக அல்லாமல் ஏழை மக்களுக்காக வாதாடியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் மூன்று துணை நீதிபதிகளின் ஊழல் குற்றச்சாட்டுகள் என்ற வழக்கில் சிறப்பாக வாதாடிக் குற்றவாளிகளை நிரூபித்ததால், அவர் பலராலும் ஈர்க்கப்பட்டு மிகச் சிறந்த வழக்கறிஞர் என்று புகழ்பெற்றார். செயல்மிகு அரசியலில் நுழையும் பொருட்டாக,1905 ல் வ.உ.சி. அவர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரானார். இந்திய தேசிய காங்கிரஸில் சேர்ந்தவுடன், இந்திய சுதந்திரம் பெறுவதற்காக அவர் முழுமனதுடன் சுதேசிப் பணியில் மூழ்கினார். இவர் நாட்டில் சுதேசி இயக்கத்தை விரிவாக்கவும், தவறான ஆங்கிலேய அரசாங்கத்தைப் பற்றி இந்திய மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நோக்கத்துடன் இருந்தார்.

வ.உ.சி. அவர்கள் தனது சொந்த மாநிலமான தமிழ்நாட்டில் வலுவான தொழிற்சங்கங்கள் இயங்க தலைமை வகித்தாலும், ஆங்கிலேயர்களிடமிருந்து இந்திய சுதந்திரத்திற்காக போராடினார். தூத்துக்குடி மற்றும் கொழும்பு இடையே முதல் உள்நாட்டு கப்பல் சேவை அமைத்த மனிதர் என எல்லோராலும் நினைவு கூறப்படுகிறார். அவருக்கு புரட்சி மனப்பாண்மையும் ஆங்கிலேயருக்கு எதிராக தைரியமாக செயல்படும் திறனும் இருந்ததால், அவரது " பாரிஸ்டர் பட்டம் " பறிக்கப்பட்டது. அவரது துணிச்சலான தன்மையே அவருக்கு
" கப்பலோட்டிய தமிழன் " என்று தமிழ்நாட்டில் பெயரெடுக்க வைத்தது. இன்றும் இவரை மக்கள் கப்பலோட்டிய தமிழன் என்றே அழைக்கின்றனர்.

**சொல்லக் கேட்டு எழுதுக.**

**1. அவன் எங்குள்ளான் என எனக்குத் தெரியவில்லை.**
**2. பாஞ்சாலி சபதம் ஐந்து சருக்கங்களை உடையது.**
**3. தெய்வீகத்தையும் தேசியத்தையும் தமது இரு கண்களாகக் கருதியவர் முத்துராமலிங்கர்.**
**4. தொல்காப்பியத்தைப் படித்துத் தொல்லையெல்லாம் மறந்தேன்.**
**5. இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல் இலக்கணமுடையது ஆகும்.**

**அறிந்து பயன்படுத்துவோம்.**

**ஒரு தொடரில் மூன்று பகுதிகள் இடம்பெறும்.**
**அவை 1. எழுவாய் 2. பயனிலை 3. செயப்படுபொருள்**
**ஒரு தொடரில் யார் ? எது ? எவை ? என்னும் வினாக்களுக்கு விடையாக அமைவது எழுவாய்.**
**(எ.கா.) நீலன் பாடத்தைப் படித்தான்.**
**பாரி யார் ?**
**புலி ஒரு விலங்கு.**
**இத்தொடர்களில் நீலன், பாரி, புலி ஆகியன எழுவாய்கள்.**
**ஒரு தொடரை வினை, வினா, பெயர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடித்து வைப்பது பயனிலை.**
**(எ.கா) கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.**
**கரிகாலன் யார் ?**
**கரிகாலன் ஒரு மன்னன்.**
**இத்தொடர்களில் கட்டினான், யார் , மன்னன் ஆகியன பயனிலைகள்.**
**யாரை, எதை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வருவது செயப்படுபொருள்.**
**(எ.கா.) நான் கவிதையைப் படித்தேன்.**
**என் புத்தகத்தை எடுத்தது யார் ?**
**நெல்லிக்கனியைத் தந்தவர் அதியமான்.**
**இத்தொடர்களில் கவிதை, புத்தகம், நெல்லிக்கனி ஆகியன செயப்படு பொருள்கள்.**

**பின்வரும் தொடர்களை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப் பிரிக்க.**
**1. வீரர்கள் நாட்டைக் காத்தனர்.**
**2. பொதுமக்கள் அந்நியத்துணிகளைத் தீயிட்டு எரித்தனர்.**
**3. கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீன்கொடி பறந்தது.**
**4. திருக்குறளை எழுதியவர் யார் ?**
**5. கபிலர் குறிஞ்சிப்பாட்டை எழுதிய புலவர்.**

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| வீரர்கள் | காத்தனர் | நாட்டை |
| பொதுமக்கள் | எரித்தனர் | அந்நியத்துணிகள் |
| பாண்டியன் | பறந்தது | மீன்கொடி |
| எழுதியவர் | யார் | திருக்குறளை |
| கபிலர் | எழுதிய புலவர் | குறிஞ்சிப்பாட்டு |

**எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அமையும்படி ஐந்து தொடர்களை எழுதுக.**
1. செல்வன் பாடம் படித்தான்.
2. ஓவியன் ஓவியம் வரைந்தான்.
3. இராசராசன் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டினான்.
4.குயவன் பானை வனைந்தான்.
5. தச்சன் மரத்தை செதுக்கினான்.

**கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**
**நான் விரும்பும் தலைவர்.**
**குறிப்புச் சட்டகம்**
**1. முன்னுரை**
**2. இளமையும் கல்வியும்**
**3. பதவியாசை இல்லாதவர்**
**4. நேர்மை தவராதவர்**
**5. கல்வி வள்ளல்**
**6. நாட்டு நலப்பணி**
**7. முடிவுரை**

**காமராசர்**

**1. முன்னுரை**

தன்னலம் சிறிதும் இன்றிப் பொதுநலம் பெரிதும் எண்ணி வாழ்நாள் முழுவதும் உழைத்த பெருந்தலைவர் காமராசர் காட்சிக்கு எளியவர். கருத்துக்கு இனியவர். காமராசர் எண்ணற்ற தலைவர்களுள் நான் விரும்பும் தலைவர் இவரே.

**2. இளமையும் கல்வியும்**

விருதுநகரில் 15.07.1903 அன்று குமாரசாமிக்கும் சிவகாமியம்மாளுக்கும் அருந்தவப் புதல்வராய்ப் பிறந்தவர். இவரது இயற்பெயர் காமாட்சி. இவர் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது வறுமை காரணமாக பள்ளி செல்வதை நிறுத்தி கடைக்கு வேலை பார்க்கச் சென்றார் பின்னர் அரசியலில் நுழைந்து அண்ணல் காந்தி வழியில் நாட்டு விடுதலைக்காகப் போராடினார்.

**3. பதவியாசை இல்லாதவர்**

1940 – ல் தமிழ்நாடு காங்கிரசின் தலைவரானார் காமராசர். 1941 ல் இவர் வேலூர்ச் சிறையில் இருந்தபோது விருதுநகர் நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.
விடுதலையாகி வந்ததும் நாட்டு விடுதலை குறித்த வேலைகள் பல தமக்கு இருப்பதால் அந்தப் பதவி வேண்டாமென்று கூறிப் பதவி விலகினார்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**4. நேர்மை தவறாதவர்**

1966 ல் அனைத்திந்திய காங்கிரசின் தலைவரானார் காமராசர். அப்பொழுது தமிழ்நாட்டிலும் காங்கிரசின் ஆட்சி. அப்போது கொலை வழக்கில் சிக்கிய உறவினர் ஒருவர் இவருதவியை நாடி வந்தனர். இவரோ மறுத்து விட்டார். அக்குற்றவாளிக்கு ஈராண்டுச் சிறைதண்டனை கிடைத்தது. காமராசர் இதில் தலையிடாதது கண்டு அதிகாரிகளும் பிறரும் வியந்தனர்.

**5. கல்வி வள்ளல்**

இராசாசியின் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்தார் காமராசர். இராசாசி காலத்தில் மூடப்பட்ட பள்ளிகளைத் திறந்தார். புதிய பள்ளிகளையும் ஏற்படுத்தினார். பள்ளிக் கல்வியை இலவசமாக்கினார். ஏழை மாணவர்க்குப் பகலுணவு வழங்கினார். ஏழை எளிய கிராமப்புற மாணவர்க்கு இலவசமாக கல்வி அளித்த

" கல்விக் கண் திறந்த காமராசர் " என்ற பேறு பெற்றார்.

**நாட்டு நலப்பணி**

உழவும் தொழிலும் சிறக்க உழைத்த காமராசர் மணிமுத்தாறு, கீழ்பவானி, வைகை, சாத்தனூர் முதலிய பெரிய நீர்பாசனத் திட்டங்களைச் செயற்படுத்தினார். சிற்றூர்களுக்கு மின்சாரம் வழங்கினார். நிலக்கரி, சிமெண்டு, இரும்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தினார்.

**முடிவுரை.**

எளிய குடும்பத்தில் பிறந்து, படிக்காத மேதையாய்ச் சிறந்து நாட்டு நலனையே நாளும் நினைத்து உண்மையாய் உழைத்துப் புகழையன்றி எதையும் சேர்க்காமல் மறைந்த காமராசரைப் போற்றுவோம் நற்பணி ஆற்றுவோம்.

---

## இயல் மூன்று — 3.7 மொழியோடு விளையாடு

**இடைச்சொல் " கு " சேர்த்துத் தொடரை எழுதுக.**

(எ.கா.)வீடு சென்றான்–வீடு+கு + சென்றான் – வீட்டுக்குச் சென்றான்.

1. மாடு புல் கொடுத்தார்

விடை : மாடு+கு+புல் கொடுத்தார் = மாட்டுக்கு = மாட்டுக்குப்புல் கொடுத்தார்.

2. பாட்டு பொருள் எழுது

விடை : பாட்டு+கு+பொருள் எழுது =பாட்டுக்குப் = பாட்டுக்குப் பொருள் எழுது.

3. செடி பாய்ந்த நீர்

விடை : செடி + கு + பாய்ந்த நீர் = செடிக்கு பாய்ந்த நீர் .

4. முல்லை தேர் தந்தான் பாரி

விடை : முல்லை+கு+தேர்தந்தார் பாரி = முல்லைக்கு தேர் தந்தான் பாரி.

5. சுவர் சாந்து பூசினாள்

விடை : சுவர்+கு + சாந்து பூசினாள் = சுவர்க்கு சாந்து பூசினாள்

**இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

| | |
|---|---|
| கண் | அழகு |
| மண் | |
| விண் | |
| பண் | உண்டு |

| | |
|---|---|
| கண்ணழகு | கண்ணுண்டு |
| மண்ணழகு | மண்ணுண்டு |
| விண்ணழகு | விண்ணுண்டு |
| பண்ணழகு | பண்ணுண்டு |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**அகம் என முடியும் சொற்களை எழுதுக.**
**(எ.கா.) நூலகம்**

1. பல்கலைக் கழகம்
2. எழிலகம்
3. செயலகம்
4. அலுவலகம்

**கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.**
**(எ.கா.) திருக்குறள் ஙபால்களைக் கொண்டது.**

1. எனது வயது கந (13)
2. நான் படிக்கும் வகுப்பு எ (7)
3. தமிழ் இலக்கணம் ரு வகைப்படும் (5)
4. திருக்குறளில் கஙங அதிகாரங்கள் உள்ளன (133)
5. இந்தியா கசூசஎ ஆம் ஆண்டு விடுதலை பெற்றது (1947)

**குறிப்புகளைக் கொண்டு தலைவர்களின் பெயர்களைக் கட்டங்களிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | ரு | ப் | பூ | ர் | கு | ம | ர | ன் |
| ரு | தா | கா | ன் | க | க் | க | நா | லை |
| வ | ந் | ம | யா | ர் | டு | ட் | க | ம |
| ள் | ஜி | ரா | ஜா | யா | ர் | ட | ம் | ன |
| ளி | ஜா | ச | ர | தி | யா | பொ | மை | ன் |
| ய | ரா | ர் | னா | ர | ப | ம் | த | சி |
| ம் | இ | டி | ண் | பா | ர | ம | மி | ற |
| மை | வா | ஞ் | சி | நா | த | ன் | ழி | ப் |
| ர் | யா | சி | ச் | நா | லு | வே | ல் | பு |

| | விடைகள் : |
|---|---|
| 1. மூதறிஞர் | ராஜாஜி |
| 2. வீரமங்கை | வேலுநாச்சியார் |
| 3. பாஞ்சாலங்குறிச்சி வீரன் | கட்டபொம்மன் |
| 4. வெள்ளையரை எதிர்த்த தீரன் | சின்னமலை |
| 5. கொடிகாத்தவர் | திருப்பூர்குமரன் |
| 6. எளிமையின் இலக்கணம் | கக்கன் |
| 7. தில்லையாடியின் பெருமை | வள்ளியம்மை |
| 8. கப்பலோட்டிய தமிழர் | சிதம்பரனார் |
| 9. பாட்டுக்கொரு புலவன் | பாரதி |
| 10. விருதுப்பட்டி வீரர் | காமராசர் |
| 11. கள்ளுக்கடை மறியல் பெண்மணி | நாகம்மை |
| 12. மணியாட்சியின் தியாகி | வாஞ்சிநாதன் |

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நிற்க அதற்குத் தக...**

**என் பொறுப்புகள் ....**

1. விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறுகளை அறிந்து போற்றுவேன்.
2. தலைவர்களின் அரிய பண்புகளை உணர்ந்து பின்பற்றுவேன்.
3. தலைவர்கள் போல் தேசப்பற்றுடன் இருப்பேன்.
4. தாய்மொழியையும் தாய்நாட்டையும் நேசிப்பேன்.
5. நாட்டினை தூய்மையாக வைத்திருப்பேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | | |
|---|---|---|---|
| கதைப்பாடல் – | Ballad | பேச் சாற்றல் – | Elocution |
| துணிவு– | Courage | ஒற்றுமை – | Unity |
| தியாகம் – | Sacrifice | முழக்கம்– | Slogan |
| அரசியல் மேதை– | Political Genius | சமத்துவம்– | Equality |
| பகடை – | Dice | சூளுரை– | Vow |

**இணைத்தில் காண்க**

**வ.உ.சிதம்பரனார் வாழ்க்கைக் குறிப்புகளை இணையத்தில் தேடி எழுதுக.**

**பெயர்.**

**வ.உ.சிதம்பரம் பிள்ளை**

**பிறப்பு : செப்டம்பர் 5, 1872, ஒட்டப்பிடாரம்.**

**குழந்தை பருவமும் சட்டத்துறையும் :**

வ.உ.சியின் தந்தை உலகநாதன் பிள்ளை நாட்டின் மிக முக்கியமான வழக்கறிஞர்களுள் ஒருவர். இதுவே தனது கல்வி முடிந்த பிறகு அவரைத் தனது தந்தையின் வழியில் தொடர்ந்து செல்ல ஊக்குவித்தது. தனது பள்ளிப்படிப்பை திருநெல்வேலியில் முடித்த பிறகு ஒட்டப்பிடாரத்திலுள்ள மாவட்ட நிர்வாக அலுவலகத்தில் வேலைக்கு சேர்ந்தார். சில ஆண்டுகள் கழித்து சட்டப்பள்ளியில் சேர்ந்து தந்தையைப் போலவே வழக்கறிஞரானார்.

**அரசியல் வாழ்க்கை :** செயல்மிகு அரசியலில் நுழையும் பொருட்டாக 1905ல் வ.உ.சி அவர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினரானார். பின்பு சென்னை மாகானத்தின் உறுப்பினர்களுடன் இணைந்துப் போராடவும் தூண்டியது.

**கப்பல் நிறுவனம் :**

வ.உ.சி. அவர்கள் நவம்பர் 12, 1906ல் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் என்னும் தனது கப்பல் போக்குவரத்து நிறுவனத்தை நிறுவினார். ஆங்கிலேய அரசாங்கம் மற்றும் ஆங்கிலேய வியாபாரிகளின் கோபத்தை தாண்டியும், வ.உ.சியின் கப்பல்கள் தூத்துக்குடி – கொழும்பு இடையே வழக்கமான சேவைகளைத் தொடங்கியது.

**தேசிய மனப்பாண்மை :**

இவர், நாட்டில் சுதேசி இயக்கத்தை விரிவாக்கவும், தவறான ஆங்கிலேய அரசாங்கத்தைப் பற்றி இந்திய மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நோக்கத்துடன் இருந்தார். இச்செயல் அரசாங்கத்திற்கு எதிரானது என்று மார்ச். 12, 1908 அன்று கைது செய்யப்பட்டார். இவர் சிறையில் கடின உழைப்பில் ஈடுபட்டார். அதனால் அவர் உடல் நலம் படிப்படியாக சரிந்து, இதன் காரணமாக ஆங்கில அரசாங்கம் அவரை விடுவித்தது.

**இலக்கிய படைப்புகள் :**

இவர் சிறையில் இருந்தபோது, தனது சுயசரிதையை எழுதத் தொடங்கிய அவர், 1912ல் விடுதலைப் பெற்றபின் அதனை நிறைவு செய்தார், ஒரு சில நாவல்களையும் எழுதியுள்ளார். தத்துவ எழுத்தாளர்களின் படைப்புகளை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தமிழில் மிக முக்கியமான படைப்புகளான திருக்குறள், மற்றும் தொல்காப்பியத்தின் தொகுப்புக்களையும் வெளியிட்டுள்ளார்.

**இறப்பு :**

இவர் 1936 நவம்பர் 18 ம் தேதி அன்று இயற்கை எய்தினார்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் ஒன்று


## 1. அறிவியல் ஆக்கம்

கவிதைப்பேழை

இயல் ஒன்று

## 1.1. கலங்கரை விளக்கம்

மனவரைபடம்




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வேயாமாடம் எனப்படுவது ..........**

அ) வைக்கோலால் வேயப்படுவது
ஆ) சாந்தினால் பூசப்படுவது
இ) ஓலையால் வேயப்படுவது
ஈ) துணியால் மூடப்படுவது **விடை : ஆ) சாந்தினால் பூசப்படுவது**

**2. உரவுநீர் அழுவம் – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ............**

அ) காற்று ஆ) வானம் இ) கடல் ஈ) மலை **விடை : இ) கடல்**

**3. கடலில் துறை அறியாமல் கலங்குவன .............**

அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள்
இ) தூண்கள் ஈ) மாடங்கள் **விடை : ஆ) மரக்கலங்கள்**

**4. "தூண்" என்னும் பொருள் தரும் சொல் .............**

அ) ஞெகிழி ஆ) சென்னி இ) ஏணி ஈ) மதலை **விடை : ஈ) மதலை**

**குறுவினா.**

**1. மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது ?**

மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது கலங்கரை விளக்கமாகும்.

**2. கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும் ?**

கலங்கரை விளக்கில் இரவு நேரத்தில் மட்டுமே விளக்கு ஏற்றப்படும்.

**சிறுவினா**

**கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.**

1. களங்கரை விளக்கமானது வானம் கீழே விழுந்துவிடாமல் தாங்கிக் கொண்டிருக்கும் தூண் போலத் தோற்றமளிக்கிறது.
2. ஏணி கொண்டு ஏறமுடியாத உயரத்தைக் கொண்டிருக்கிறது.
3. வேயப்படாமல் சாந்து பூசப்பட்ட விண்ணை முட்டும் மாடத்தை உடையது.
4. அம்மாடத்தில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு, கடலில் துறை அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் தன் துறை நோக்கி அழைக்கிறது.

**சிந்தனை வினா.**

**கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளைத் தவிர வேறு யாருக்கெல்லாம் பயன்படும் என நீங்கள் கருதுகிறீர்கள் ?**

1. கலங்கரை விளக்குகள் ஆபத்தான கரைப்பகுதிகளையும், பவளப்பாறைகள் நிறைந்த இடங்களைக் குறித்துக் காட்டுவதற்காகவும் பயன்படுகிறது.
2. கடல் வாணிகம் செய்பவர்களுக்கு பயன்படுகிறது.
3. கடற்படை வீரர்களுக்கு எல்லையைத் தெளிவாகக் குறிப்பிடும் கருவியாகப் பயன்படுகிறது.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. "ஞெகிழி" என்பதைக் குறிக்கும் சொல்.............**

அ) தூண் ஆ) கடல் இ) தீச்சுடர் ஈ) உச்சி **விடை : இ) தீச்சுடர்**

**2. "சென்னி" என்பது .............. பகுதியைக் குறிக்கும்**

அ) கீழ் ஆ) நடு இ) ஓரம் ஈ) உச்சி **விடை : ஈ) உச்சி**

**3. "கரை + உம்" என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..............**

அ) கரைஉம் ஆ) கரையும்
இ) கரைதும் ஈ) கரைவும் **விடை : ஆ) கரையும்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கோடிட்ட இடத்தை நிரப்புக.**
1. பெருநீர்ப்பரப்பு என்பதன் பொருள் ........... **விடை : உரவுநீர்**
2. கரையும் என்ற சொல்லின் பொருள் ........... **விடை : அழைக்கும்**

**குறுவினா.**
**1. "வேயா மாடம்" எவற்றால் அமைக்கப்படும் ?**
திண்மையாகச் சாந்தால் பூசப்பட்டு மாடம் அமைக்கப்படும்

**2. கலங்கரை விளக்கம் – குறிப்பு எழுதுக.**
1. தமிழர் தம் தொழில்நுட்ப அறிவால் கலம் படைத்து அதனைக் கொண்டு மீன்பிடித்தும், வணிகம் செய்தும் வாழ்ந்து வந்தனர்.
2. கடற்பயணம் சென்று கரை திரும்பத் தமிழர் கண்ட தொழில் நுட்பமே கலங்கரை விளக்கம்


**சிறுவினா.**
**1. கடியலூர் உருத்திரங்கண்ணனார் – குறிப்பு எழுதுக.**
**ஆசிரியர் குறிப்பு:**
பெயர் : **உருத்திரங்கண்ணனார்**
ஊர் : **கடியலூர்**
காலம் : **சங்க காலம்**
இயற்றிய நூல்கள் : **பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை**

**2. பத்துப்பாட்டு நூல்கள் யாவை ?**
1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. பெரும்பாணாற்றுப்படை
4. சிறுபாணாற்றுப்படை
5. முல்லைப் பாட்டு
6. மதுரைக் காஞ்சி
7. நெடுநல் வாடை
8. குறிஞ்சிப்பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம்

**கற்பவை கற்றபின்**

**1. கடற்கரைக்குச் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்க.**
1. பேரலைகள் நிறைந்திருக்கும்.
2. கதிரவன் உதிப்பதையும், மறைவதையும் காணலாம்.
3. குளிர்காற்று உள்ளத்தைப் பண்படுத்தும்.
4. கடற்கரையில் அரியவகைப் பாசிகள், முத்துக்களைக் காணலாம்.
5. அழகிய சுற்றுலாத் தளமாக விளங்குகிறது.

**2. கலங்கரை விளக்கம் – மாதிரி ஒன்று செய்து வருக.**




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. கடலும் கலங்கரை விளக்கமும் – ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுக.**



Padasalai

## கவிதைப்பேழை

**இயல் ஒன்று**

## 1.2. கவின்மிகு கப்பல்

**மனவரைபடம்**

**கவின்மிகு கப்பல்**

- புலவர் பெயர் – மருதன் இளநாகனார்
  - காலம் – சங்க காலம்
  - சிறப்பு – மருதத் திணை பாடுவதில் வல்லவர்
  - நூல் – எட்டுத் தொகை, அகநானூறு
  - பாடல் – 255 வது பாடல்
- நாவாய் – அழகு பொருந்தியது
  - கடல் – புலால் நாற்றமுடைய அலை வீசும்
  - காற்று – இரவு பகல் பாராது வீசும்
  - துறைமுகம் – உயர்ந்த கரையாக உடையது
  - கலங்கரை விளக்கம் – ஒளியில் திசையை அறிய உதவும்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. இயற்கை வங்கூழ் ஆட்ட – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ..........**

அ) நிலம் ஆ) நீர் இ) காற்று ஈ) நெருப்பு **விடை : இ) காற்று**

**2. மக்கள் ............. ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்**

அ) கடலில் ஆ) காற்றில் இ) கழனியில் ஈ) வங்கத்தில் **விடை : ஈ) வங்கத்தில்**

**3. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது .............**

அ) காற்று ஆ) நாவாய் இ) கடல் ஈ) மணல் **விடை : இ) கடல்**

**4. "பெருங்கடல்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............**

அ) பெரு + கடல் ஆ) பெருமை + கடல்

இ) பெரிய + கடல் ஈ) பெருங் + கடல் **விடை : ஆ) பெருமை + கடல்**

**5. "இன்று + ஆகி" என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............**

அ) இன்றுஆகி ஆ) இன்றிஆகி

இ) இன்றாகி ஈ) இன்றா ஆகி **விடை : இ) இன்றாகி**

**6. எதுகை இடம்பெறாத இணை .............**

அ) இரவு – இயற்கை ஆ) வங்கம் – சங்கம்

இ) உலகு – புலவு ஈ) அசைவு – இசைவு **விடை : அ) இரவு – இயற்கை**

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. வங்கம் | – | பகல் |
| 2. நீகான் | – | கப்பல் |
| 3. எல் | – | கலங்கரை விளக்கம் |
| 4. மாட ஒள்ளெரி | – | நாவாய் ஓட்டுபவன் |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1. வங்கம்** | – | **கப்பல்** |
| **2. நீகான்** | – | **நாவாய் ஓட்டுபவன்** |
| **3. எல்** | – | **பகல்** |
| **4. மாட ஒள்ளெரி** | – | **கலங்கரை விளக்கம்** |

**குறுவினா**

**1. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது ?**

உலகம் புடை பெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றமுடையது நாவாய் என அகநானூறு கூறுகிறது.

**2. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணை செய்கிறது ?**

இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்த நாவாய்ஓட்டிகளுக்குத் துணை செய்கிறது.

**சிறு வினா.**

**கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது ?**

1. உலகம் புடை பெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய்.
2. அது புலால் நாற்றமுடைய அலைவீசும் பெரிய கடலின் நீரைப் பிளந்துகொண்டு செல்லும்.
3. இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்தும்.
4. உயர்ந்த கரையை உடைய மணல் நிறைந்த துறைமுகத்தில் கலங்கரை விளக்கத்தின் ஒளியால் திசை அறிந்து நாவாய் ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான்.

**சிந்தனை வினா.**

**தரைவழிப் பயணம், கடல்வழிப் பயணம் ஆகியவற்றுள் நீங்கள் விரும்புவது எது ? ஏன் ?**

**நாங்கள்விரும்புவது தரைவழிப் பயணம்.**

**காரணம் :**

1. நினைத்த இடத்திற்கு உடனடியாகச் செல்ல இயலும்
2. பயணச் செலவு குறைவு
3. பாதுகாப்பு நிறைந்தது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. "உரு" என்ற சொல்லின் பொருள்**

அ) காற்று ஆ) அழகு இ) பகல் ஈ) பிளக்க **விடை : ஆ) அழகு**

**2. "போழ" என்பது ............எனப் பொருள் தரும்**

அ) அழகு ஆ) பிளக்க இ) காற்று ஈ) கப்பல் **விடை : ஆ) பிளக்க**

**3. "கோடு உயர்" என்னும் சொல்லின் பொருள்............**

அ) உரு ஆ) போழ இ) நாவாய் ஈ) கரை உயர்ந்த **விடை : ஈ) கரை உயர்ந்த**

**4. "கோடுஉயர்" என்பதனைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் .............**

அ) கோ + டுஉயர் ஆ) கோடு + உயர்

இ) கோடுஉ + யர் ஈ) கோட்டு + உயர் **விடை: ஆ) கோடு + உயர்**

---

**குறுவினா**

**1. கண்ணுக்கு விருந்தாகக் காட்சியளிப்பவை எவை ?**

கண்ணுக்கு விருந்தாகக் காட்சியளிப்பவை கடலும் கப்பலும் ஆகும்.

---

**2. எவற்றின் துணை கொண்டு நம் முன்னோர் கப்பலைச் செலுத்தினர் ?**

காற்றின் துணை கொண்டு நம் முன்னோர் கப்பலைச் செலுத்தினர்.

---

**சிறுவினா.**

**1. "அகநானூறு" – குறிப்பு தருக**

1. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
2. புலவர் பலரால் பாடப்பட்ட நானூறு பாடல்களைக்கொண்டது.
3. இந்நூலினை நெடுந்தொகை என்றும் அழைப்பர்
4. இந்நூலின் 255 ஆம் பாடல் நமக்குப் பாடமாகத் தரப்பட்டுள்ளது.

---

**2. எட்டுத்தொகை நூல்கள் யாவை ?**

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

---

**மருதன் இளநாகனார் – குறிப்பு தருக :**

**ஆசிரியர் குறிப்பு :**

பெயர் : **மருதன் இளநாகனார்**

காலம் : **சங்ககாலப் புலவர்**

சிறப்பு : **மருதத்திணை பாடுவதில் வல்லவர் என்பதால் மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார்**

பிற நூல் : **கலித்தொகையின் மருதத் திணையில் உள்ள முப்பத்து ஐந்து பாடல்களையும் இவர் பாடியுள்ளார்.**

---

## கற்பவை கற்றபின்

**1. கடலில் கிடைக்கும் பொருள்களின் பெயர்களைத் தொகுக்க.**

1. மீன் மற்றும் கடல் வாழ் உயிரினங்கள்
2. பல்வேறு உலோகங்கள், தாதுக்கள்
3. எண்ணெய், இயற்கை வாயு
4. முத்து, பவளம் மற்றும் சுண்ணாம்புக் கற்கள்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. கடற்பயணம் பற்றிய சிறுகதை ஒன்றை அறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க.**

கடற்கரைக்கு அருகில் ஓர் இடையன் தன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு இருந்தான். கடல் மிக அமைதியாக இருந்தது.

ஒரு கடற்பயணம் மேற்கொண்டு சில பொருள்களை கொண்டு சென்று விற்கவேண்டும் என்று ஆசைபட்டான். எனவே தனது ஆடுகளை விற்று அந்தப்பணத்தில் பேரீச்சம்பழத்தை வாங்கிக் கொண்டு கடற்பயணம் கிளம்பினான்.

நடுக்கடலில் கப்பல் போகும்போது பெரிய சூறாவளி வீசியது. கப்பல் மூழ்கும் அபாயம் ஏற்பட்டது. அவன் பேரீச்சம் பழங்களைக் கடலில் எறிந்து விட்டு உயிர் தப்பினான்.

சில காலத்திற்குப் பின் மீண்டும் அவன் கடற்கரையில் ஆடு மேய்த்தவாறு இருந்தான். அந்த வழியாக வந்த ஒருவர் கடல் அமைதியாக அழகாக இருக்கிறது என்றார்.


உடனே ஆட்டிடையன் அதற்குப் பேரீச்சம்பழம் தின்ன ஆசை வந்துவிட்டது. அதனால்தான் அமைதியாக இருப்பது போல் தோன்றுகிறது என்று கூறினான்.

## உரைநடை உலகம்

**இயல் ஒன்று**

## 1.3. தமிழரின் கப்பற்கலை

**மனவரைபடம்**




## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தமிழர்கள் சிறிய நீர் நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது ..........**

அ) கலம் ஆ) வங்கம் இ) நாவாய் ஈ) ஓடம் **விடை : ஈ) ஓடம்**

**2. தொல்காப்பியம் கடற்பயணத்தை.......... வழக்கம் என்று கூறுகிறது.**

அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ) கண்ணீர் **விடை : இ) முந்நீர்**

**3. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ..............**

அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்ணடை ஈ) சமுக்கு **விடை : அ) சுக்கான்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் ............ என அழைக்கப்படும்.
**விடை : தொகுதி**

2. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது ............ **விடை : நங்கூரம்**

3. இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ............ எனக் குறிப்பிடப்படும்.
**விடை : கண்ணடை**

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. எரா | – | திசை காட்டும் கருவி |
| 2. பருமல் | – | அடிமரம் |
| 3. மீகாமன் | – | குறுக்குமரம் |
| 4. காந்த ஊசி | – | கப்பலைச் செலுத்துபவர் |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1. எரா** | **–** | **அடிமரம்** |
| **2. பருமல்** | **–** | **குறுக்குமரம்** |
| **3. மீகாமன்** | **–** | **கப்பலைச் செலுத்துபவர்** |
| **4. காந்த ஊசி** | **–** | **திசை காட்டும் கருவி** |

**தொடர்களில் அமைத்து எழுதுக.**

**1. நீரோட்டம் 2. காற்றின் திசை 3. வானியல் அறிவு 4. ஏற்றுமதி**

**விடை :**

1. கடலில் **நீரோட்டம்** மிகுதியாக இருக்கும்.
2. தமிழர்கள் **காற்றின் திசை** அறிந்து கப்பலைச் செலுத்துவதில் வல்லவர்கள்.
3. தமிழர்களின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது **வானியல் அறிவு** ஆகும்.
4. பூம்புகார் துறைமுகத்திலிருந்து பொருட்கள் கப்பல்கள் மூலம் **ஏற்றுமதி** செய்யப்பட்டது.

**குறுவினா**

**1. தோணி என்னும் சொல்லின் பெயர்க் காரணத்தைக் கூறுக.**

★ தமிழர்கள் நீரில் பயணம் செய்ய எடை குறைந்த மரங்களின் உட்பகுதியைக் குடைந்து எடுத்துவிட்டுத் தோணியாகப் பயன்படுத்தினார்கள்.

★ உட்பகுதி தோண்டப்பட்டவை என்பதால் அவை தோணிகள் எனப்பட்டன.

**2. கப்பல் கட்டும்போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய் நார் (அ) பஞ்சு வைப்பதன் நோக்கம் என்ன ?**

கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைப்பதற்காக கப்பல் கட்டும்போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய் நார் (அ) பஞ்சு வைக்கப்படுகிறது.

**3. கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.**

**கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்கள் :**

எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம்.

**சிறுவினா.**

**1. சிறிய நீர்நிலைகளையும் கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.**

1. தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்ற ஊர்திகளை தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தினர்.

2. கலம், வங்கம், நாவாய் போன்ற பெரிய ஊர்திகளை கொண்டு தமிழர்கள் கடல்களைக் கடக்கப் பயன்படுத்தினர்

**2. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.**

1. கடலில் காற்று வீசும் திசை, கடல் நீரோட்டங்களின் திசை ஆகியவற்றைத் தமிழர்கள் தம் பட்டறிவால் நன்கு அறிந்து அவற்றுக்கேற்ப உரிய காலத்தில் சரியான திசையில் கப்பலைச் செலுத்தினர்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



2. திசைகாட்டும் கருவியைப் பயன்படுத்தியும், வானில் தோன்றும் விண்மீன்களின் நிலையை வைத்தும் திசையை அறிந்து கப்பலைச் செலுத்தினர்

3. கப்பல் ஓட்டும் மாலுமிகள் சிறந்த வானியல் அறிவையும் பெற்றிருந்ததால் கோள்களின் நிலையை வைத்துப் புயல், மழை போன்றவை தோன்றும் காலங்களையும், கடல்நீர் பொங்கும் காலத்தையும் அறிந்து தகுந்த காலத்தில் கப்பல்களைச் செலுத்தினர்.

**3. கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை ?**

1. நீண்ட தூரம் கடலிலேயே செல்ல வேண்டி இருப்பதால் கப்பல்களைப் பாதுகாப்பானவைகளாகவும், வலிமை மிக்கவைகளாகவும் உருவாக்கினர்.
2. கப்பல்கள் தண்ணீரிலேயே இருப்பவை என்பதால் தண்ணீரால் பாதிப்பு அடையாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர்.
3. நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, புன்னை, இலுப்பை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர்.
4. பக்கங்களுக்குத் தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்களைப் பயன்படுத்தினர்.
5. மரத்தின் வெட்டப்பட்ட பகுதியை வெட்டுவாய் என்பர். அதன் நிறத்தைக் கொண்டு மரத்தின் தன்மையை அறிவர்.
6. சுழி உள்ள மரங்களைப் பயன்படுத்தாமல் தவிர்த்தனர். நீளம், அகலம், உயரம் ஆகியவற்றைச் சரியான முறையில் கணக்கிட்டுக் கப்பல்களை உருவாக்கினர். இவற்றைத் தச்சுமுழம் என்னும் நீட்டலளவையில் கணக்கிட்டனர்.
7. மரங்களையும் பலகைகளையும் ஒன்றோடு இணைக்கும் போது அவற்றுக்கு இடையே தேங்காய் நார், பஞ்சு ஆகியவற்றில் ஒன்றை வைத்து நன்றாக இறுக்கி ஆணிகளை அறைந்தனர்.
8. சுண்ணாம்பையும் சணலையும் கலந்து அரைத்து அதில் எண்ணெய் கலந்து கப்பலின் அடிப்பகுதியில் பூசினர். இதனால் கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைத்தன.

**சிந்தனை வினா.**

**இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.**

1. நினைத்த இடத்திற்கு விரைவாகச் செல்ல இயலாது.
2. கால விரயம் ஏற்படும்.
3. மிகுந்த பயணச் செலவு ஏற்படும்.
4. அதிக ஆபத்துள்ளது என உணர்வது.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஏற்றுமதி குறித்து கூறும் நூல் .............**

அ) சிந்தாமணி ஆ) கம்பராமாயணம்
இ) பட்டினப்பாலை ஈ) கலித்தொகை **விடை : இ) பட்டினப்பாலை**

**2. தமிழர்கள் கடலைக் கடக்கப் பயன்படுத்தியதில் பெரியவை .......... ஆகும்.**

அ) படகு ஆ) மிதவை இ) நாவாய் ஈ) தெப்பம் **விடை : இ) நாவாய்**

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கப்பல் கட்டும் கலைஞர்கள் ............என்று அழைக்கப்பட்டனர். **விடை : கம்மியர்**

2. காற்றின் உதவியால் செலுத்தப்படும் கப்பல்கள்............ எனப்பட்டன. **விடை : பாய்மரக்கப்பல்கள்**

**குறுவினா**

**1. கப்பல் கட்டும் கலைஞர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர் ?**

கப்பல் கட்டும் கலைஞர்கள் கம்மியர் என்று அழைக்கப்பட்டனர்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. பாய்மரங்களைக் கட்டும் கயிறுகளின் சிலவகைப் பெயர்களை எழுதுக.**

1. ஆஞ்சான் கயிறு 2. தாம்பாங் கயிறு 3. வேடாங்கயிறு
4. பளிங்கைக்கயிறு 5. மூட்டங்கயிறு 6. இளங்கயிறு

**3. கப்பலில் வரும் பொருள்களை எவற்றின் மூலம் கரைக்குக் கொண்டுவந்தனர் ? ஏன் ?**

1. பெரிய கப்பல்கள் துறைமுகத்தில் கரைக்கு அருகில் வர இயலாது.
2. எனவே, கப்பலில் வரும் பொருள்களைத் தோணிகள் மூலம் கரைக்கு கொண்டுவந்தனர்.

**சிறுவினா.**

**1. "பாய்மரக் கப்பல்கள்" – விளக்குக**

1. காற்றின் உதவியால் செலுத்தப்படும் கப்பல்கள் பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன.
2. பெரிய பாய்மரம், திருக்கைத்திப் பாய்மரம், காணப் பாய்மரம், கோசுப் பாய்மரம் போன்ற பலவகையான பாய்மரங்களைத் தமிழர்கள் பயன்படுத்தினர்.
3. பாய்மரங்களைக் கட்டும் கயிறுகளும் பல வகையாக இருந்தன.
4. ஆஞ்சான் கயிறு, தாம்பாங் கயிறு, வேடாங்கயிறு, பளிங்கைக்கயிறு, மூட்டங்கயிறு, இளங்கயிறு, கோடிப்பாங்கயிறு என்பவை அவற்றுள் சில.
5. பாய்மரக் கப்பலின் பாய், கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும் பொழுது அவற்றை மரப்பிசின் கொண்டு இணைத்தனர் என்று பரிபாடல் கூறுகிறது.

## கற்பவை கற்றபின்

**1. பலவகையான கப்பல்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.**



**2. தரைவழிப் பயணம், கடல்வழிப் பயணம், வான்வழிப் பயணம் ஆகியவை குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**குமரன் :** என்ன நண்பா இரண்டு நாட்களாக பள்ளிக்கு வரவில்லை.....
**முகிலன் :** உடல் நலமில்லையா .....
**அகிலன் :** இல்லை!... இல்லை!... குடும்பத்துடன் சுற்றுலா சென்றிருந்தோம்..
**குமரன் :** சுற்றுலாவா.....
**அகிலன் :** ஆமாம்.. கன்னியாகுமரி சென்றிருந்தோம்..
**முகிலன் :** பயணம் பற்றி விளக்கமாகச் சொல் நண்பா..
**அகிலன் :** தரைவழிப் பயணமும், கடல்வழிப் பயணமும் ஒருங்கே கிடைத்தது நண்பா..
**குமரன் :** அப்படியா ! கடல்வழிப்பயணமா !.....
**அகிலன் :** ஆமாம், முதல் முதலாக கடற்கரையிலிருந்து கடல் வழியாக சிறிய கப்பலில் விவேகானந்தர் பாறையைக் காணச் சென்றது எனக்குப் புது அனுபவமாக இருந்தது நண்பா...

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com


**குமரன் :** நீ கொடுத்து வைத்தவண்டா....
**முகிலன் :** அடுத்த மாதம் நானும் என் குடும்பத்தாரும் விமானத்தில் உறவினரின் இல்ல நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருக்கிறோம் நண்பா...
**குமரன் :** அப்படியா... வாழ்த்துக்கள் நண்பா...
**அகிலன் :** உன்னுடைய விமானப் பயணத்தைப் பற்றிக் கட்டாயம் எங்களிடம் பகிர்ந்துகொள்வாய் என நம்புகிறேன்...

## விரிவானம்

### இயல் ஒன்று

### 1.4. ஆழ்கடலின் அடியில்

**மனவரைபடம்**




## மதிப்பீடு

**ஆழ்கடலின் அடியில் கதையைச் சுருக்கி எழுதுக.**

முன்னுரை : கடல் பல்வேறு விந்தைகளைத் தன்னுள் கொண்டது. கடலுக்கடியில் பல நகரங்களும் கப்பல்களும் மூழ்கிக் கிடக்கின்றன. ஒரு கற்பனையான நீர்மூழ்கிக் கப்பலில் சென்று அவற்றையெல்லாம் காண்போம்.

விலங்கியல் பேராசிரியர் : 1886 ஆம் ஆண்டு கப்பல்களை உலோகத்தால் ஆன உடலைக் கொண்ட ஒரு விந்தையான விலங்கு தாக்குவதாக செய்தியறிந்த பியரி அமெரிக்காவின் நியூயார்க் நகரிலிருந்து ஃபராகட் என்ற தலைவரின் துணையோடு கடற் பயணம் மேற்கொண்டார். அவருடன் நெட் மற்றும் கான்சீலும் உடன் சென்றார்கள்.

தேடலும் கண்டுபிடித்தலும் : மூன்று மாதங்கள் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையே உள்ளபெருங்கடல் பரப்பில் ஓர் இடம் விடாமல் தேடி இறுதியாக அது விலங்கல்ல நீர் மூழ்கிக் கப்பல் என்பதை நெட் என்பவர் மூலம் கண்டறிந்தனர்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நாட்டிலஸ் :** நெமோ என்பவரின் நீர்மூழ்கிக் கப்பலே நாட்டிலஸ் ஆகும். நெமோ, பியரி, நெட், கன்சீல் ஆகிய மூவரையும் சிறைபிடித்து தனது நீர் மூழ்கிக் கப்பலில் அடைத்து வைத்தார். கப்பலில் மிகச் சிறந்த நூலகம் ஒன்றும், மிகப்பெரிய அருங்காட்சியகம் ஒன்றும் இருந்தன. கப்பல் எந்தக் கடலில் எந்தப் பகுதியில் இருக்கிறது, கடலுக்கு அடியில் எவ்வளவு ஆழத்தில் இருக்கிறது ஆகியவற்றைத் துல்லியமாகக் காட்டும் பெரிய திரை ஒன்றும் அங்கே இருந்தது.

**தப்பிக்க முயற்சித்தல் :** மூவரும் நாட்டிலஸ் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து தப்பிக்க முயற்சி செய்து தோல்வியுற்றனர். பின் நெமோவிடம் நீர்மூழ்கிக் கப்பல் எவ்வாறு செயல்படுகிறது என்பதனைக் கேட்டு தெளிவுற்றனர். நீர்மூழ்கிக் கப்பல் திடீரென்று மணல் திட்டில் சிக்கிக் கொண்டது.

**தீவு மனிதர்கள் :** நாட்டிலஸ் செயல்பட சில நாட்கள் ஆகும் என்பதால், மேல் தளத்திற்கு வந்தபோது ஒரு தீவைக் கண்டு அத்தீவிற்குச் சென்றனர். அங்கு வாழும் மனிதர்கள், மனிதர்களைக் கொன்று தின்னும் பழக்கமுடையவர்கள் என்பதை அறிந்து அவர்களிடமிருந்து தப்பிக்கப் பெரு முயற்சியை மேற்கொண்டனர்.

**முத்துக்குளித்தல் :** நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் தொடர்ந்தது. ஓர் இந்தியர் கடலுக்கடியில் தன்னந்தனியாக முத்துக்குளிப்பதைக் கண்டு வியப்படைந்தனர். அவரைச் சுறா மீன் ஒன்று தாக்க வருவதைக் கண்டு நெமோ தன் கையில் இருந்த வாளினால் சுறா மீனைக் கிழித்து இந்தியரைக் காப்பாற்றினார்.

**எரிமலை :** கடலுக்குள் தீப்பிழம்பைக் கக்கிக் கொண்டிருக்கும் எரிமலையைக் கண்டு வியந்தனர். பூகம்பத்தால் கடலுக்குள் மூழ்கிப்போன "அட்லாண்டிஸ்" என்னும் நகரத்தின் இடிபாடுகளையும் கண்டனர். பூமியின் தென்துருவத்திற்குச் சென்று பென்குவின், கடல்சிங்கம் போன்ற அரிய வகைப் பறவைகளையும், விலங்குகளையும் கண்டனர்.

**இயற்கையின் சோதனை :** ஒரு நாள் நாட்டிலஸ் ஒருபெரும் கடல் சுழலுக்குள் சிக்கிக்கொண்டது. மூவரும் கடலுக்குள் தூக்கி வீசப்பட்டனர். நார்வே நாட்டு மீனவரால் காப்பாற்றப்பட்டனர்.

**முடிவுரை :** நாட்டிலஸ்க்கு என்ன நேர்ந்தது என்பது பற்றியோ நெமோ என்ன ஆனார் என்பது பற்றியோ யாருக்கும் எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை.

## கூடுதல் வினாக்கள் விடைகள்

**ஜுல்ஸ் வெர்ன் – குறிப்பு தருக :**

**ஆசிரியர் குறிப்பு :**

பெயர் : **ஜுல்ஸ் வெர்ன்**

நாடு : **பிரான்சு**

சிறப்பு : **அறிவியல் புனைகதைகளின் தலைமகன்**

பிற புதினங்கள் : **1. எண்பது நாளில் உலகத்தைச் சுற்றி.**

**2. பூமியின் மையத்தை நோக்கி ஒரு பயணம்.**

## கற்பவை கற்றபின்

**1.** ஆழ்கடல் காட்சியொன்றைக் கற்பனையாகப் படம் வரைந்து வண்ணம் தீட்டுக.





Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. நீர்மூழ்கிக்கப்பல் இயங்கும் முறைபற்றிய செய்திகளைத் திரட்டித் தொகுத்து எழுதுக.**

1. நீர்மூழ்கிக் கப்பலில் 2 என்ஜின்கள் உள்ளன. நீர்மட்டத்திற்கு மேலே ஒரு என்ஜின் உள்ளது. இது கப்பல் செல்லும்போது நீராவியால் இயக்கப்படும். இன்னொன்று கப்பல் நீரில் மூழ்கிச் செல்லும்போது மின்சாரத்தால் இயக்கப்படும்.

2. கப்பல் நீரினுள் மூழ்கும் முன்பு அனைத்துக் கதவுகளும் அடைக்கப்பட்டு கோபுர வாசலும் மூடப்படும். பின்னர் நீர்த் தொட்டி திறக்கப்பட்டு, கடல் நீர் தொட்டிக்குள் வந்து நிறைந்தவுடன் கப்பலின் எடை மிகுந்து கீழே செல்லும். இதற்குச் சிறகுகளும் உறுதுணையாகச் செயல்படும். கப்பல் கடலுக்குள் மூழ்கும்போது முன்புறம் தாழ்ந்தும், பின்புறம் உயர்ந்தும் மீன் நீந்திச் செல்வது போல் இருக்கும்.

3. கப்பல் மேலே வரும்போது காற்றுக் குழாய்கள் திறக்கப்படும். காற்றானது நீர்த்தொட்டிக்குள் சென்று அங்கிருக்கும் நீரை வெளியேற்றும். இதனால் கப்பலின் எடை குறைந்து மேலே நீர்மட்டத்திற்கு வரும்.

---

## கற்கண்டு

**இயல் ஒன்று**

## 1.5. இலக்கியவகைச் சொற்கள்

**மனவரைபடம்**

இலக்கியவகைச் சொற்கள்

↓

நான்கு வகைப்படும்

இயற்சொல் – எளிதில் பொருள் விளங்கும்
– மண், பொன், நடந்தான்

↓

திரிசொல் – கற்றோர்க்கு மட்டுமே விளங்குவது
– வங்கம், கழி

↓

திசைச்சொல் – பிறமொழிகளிலிருந்து வந்து தமிழில் வழங்குவது
– சாவி, சன்னல்

↓

வடசொல் – வட மொழியிலிருந்து வந்து தமிழில் இடம்பெறுவது
– வருடம், கமலம்

---

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ............**

அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல் **விடை : அ) இயற்சொல்**

**2. பலபொருள் தரும் ஒரு சொல் என்பது ............**

அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல் **விடை : ஆ) திரிசொல்**

**3. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ............**

அ) மலையாளம் ஆ) கன்னடம்
இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு **விடை : இ) சமஸ்கிருதம்**

---

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. இயற்சொல் | – | பெற்றம் |
| 2. திரிசொல் | – | இரத்தம் |
| 3. திசைச்சொல் | – | அழுவம் |
| 4. வடசொல் | – | சோறு |

**விடை :**

| | | |
|---|---|---|
| 1. இயற்சொல் | – | சோறு |
| 2. திரிசொல் | – | அழுவம் |
| 3. திசைச்சொல் | – | பெற்றம் |
| 4. வடசொல் | – | இரத்தம் |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**குறு வினா :**

**1. மண், பொன் என்பன எவ்வகைச் சொற்கள் ?**
மண், பொன் என்பன பெயர் இயற்சொற்கள் ஆகும்.

**2. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை ?**
1. பெயர் இயற்சொல் → மண், பொன்
2. வினை இயற்சொல் → நடந்தான், வந்தான்
3. இடை இயற்சொல் → அவனை, அவனால்
4. உரி இயற்சொல் → மாநகர், உறுபுகழ்

**3. குங்குமம், கமலம் என்பன எவ்வகை வடசொற்கள் ?**
குங்குமம், கமலம் என்பன தற்சமம் வடசொற்கள் ஆகும்.

சிறுவினா

**1. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**
இலக்கிய வகைச் சொற்கள் நான்கு வகைப்படும். அவை,
1. இயற்சொல், 2. திரிசொல், 3. திசைச்சொல், 4. வடசொல்

**2. திரிசொல்லின் வகைகள் குறித்து விளக்குக.**
**1. ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள் :**
(எ.கா) – வங்கம், அம்பி, நாவாய் என்பன கப்பல் என்னும் ஒரே பொருளைத் தருகின்றன.
**2. பலபொருள் குறித்த ஒரு திரிசொல் :**
(எ.கா) – இதழ் என்னும் சொல் பூவின் இதழ், உதடு, கண் இமை, பனையேடு, நாளிதழ் ஆகிய பல பொருள்களைத் தருகிறது.

**3. பண்டிகை, கேணி என்பன எவ்வகைச் சொற்கள் ? விளக்குக.**
1. பண்டிகை, கேணி என்பன திசைச் சொற்கள் ஆகும்.
2. பிறமொழிகளிலிருந்து வந்து தமிழில் இடம் பெறுவதால் இவை திசைச் சொற்கள் ஆகும்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மாநகர் என்பது...................இயற்சொல் ஆகும்.**
அ) பெயர் ஆ) வினை இ) இடை ஈ) உரி **விடை : ஈ) உரி**

**2. திரிசொற்களை .......... வகைப்படுத்தலாம்.**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **விடை : அ) இரண்டு**

**3. சாவி, சன்னல், பண்டிகை என்பன................ சொற்களாகும்**
அ) இயற் ஆ) திரி இ) திசை ஈ) வட **விடை : இ) திசை**

**4. வடமொழியிலிருந்து வந்து தமிழில் இடம் பெறும் சொற்கள் .................. எனப்படும்.**
அ) இயற்சொற்கள் ஆ) திரிசொற்கள்
இ) திசைச் சொற்கள் ஈ) வடசொற்கள் **விடை : ஈ) வடசொற்கள்**

**குறுவினா**

**1. வடசொற்களை எத்தனை வகையாகப் பிரிப்பர் ?**
வடசொற்களை இரண்டு வகையாகப் பிரிப்பர். அவை, தற்சமம், தற்பவம்.
(எ.கா) தற்சமம் : கமலம், அலங்காரம்
தற்பவம் : லக்ஷ்மி → இலக்குமி,
விஷம் → விடம்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிறு வினா.**

**1. திசைச் சொல் விளக்குக.**

1. வடமொழி தவிர, பிற மொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம் பெறும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.

(எ.கா) சாவி, சன்னல், பண்டிகை, இரயில்

2. முற்காலத்தில் பாண்டியநாட்டைத் தவிர, தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் வழங்கிய சொற்களையும் திசைச் சொற்கள் என்றே வழங்கினர்.

(எ.கா) கேணி – கிணறு ; பெற்றம் – பசு

## கற்பவை கற்றபின்

**நாளிதழ் செய்தியொன்றை எடுத்துக்கொண்டு அதிலுள்ள நால்வகைச் சொற்களையும் வகைப்படுத்திப் பட்டியல் உருவாக்குக.**



கடல் மட்டம் குறைந்ததால் திரும்பிய கப்பல்கள்

**ராமேஸ்வரம், மார்ச் 1–** பாம்பனில் கடல் நீர்மட்டம் குறைந்ததால் பாலத்தை கடந்து செல்ல முடியாமல் கப்பல்கள் திரும்பி சென்றன.

ஒடிசா மாநிலம் பாரதீப் துறைமுகத்தில் இருந்து மும்பை துறைமுகம் செல்ல மூன்று நாட்களுக்கு முன்பு ராமேஸ்வரம் அருகே பாம்பன் கடற்கரைக்கு மிதவை கப்பல்கள் வந்தது.

நேற்று மதியம் பாம்பன் ரயில் தூக்கு பாலம் திறந்ததும், மிதவை கப்பல்கள் பாலத்தை கடந்து சென்றன. தொடர்ந்து சென்னை காட்டுபள்ளி மற்றும் கடலூார் துறைமுகத்தில் இருந்து கர்நாடகா கார்வார், மும்பை துறைமுகம் செல்ல கனரக இரு மிதவை, இரு இழுவை கப்பல்கள் பாம்பன் பாலத்தை கடந்து செல்ல முயன்ற போது வழக்கத்தை விட பாம்பன் கடல்நீர் மட்டம் 3 அடி குறைந்திருந்தது.

இதனால் கனரக மிதவை கப்பல்கள் கடலுக்குள் இருந்த பாறையில் தரை தட்டியதால், அக்கப்பலை திரும்பி செல்லுமாறு துறைமுக ஊழியர்கள் தெரிவித்தனர். இதையடுத்து 4 கப்பல்களும் திரும்பி சென்று பாம்பன் பாலத்தில் இருந்து 500 மீ., தூரத்தில் பாதுகாப்பாக நிறுத்தினர். இதன் பின் தூக்கு பாலத்தை ஊழியர்கள் மூடினர்.

பத்திரிக்கைச் செய்தி

**இயற்சொல் :**

1. பெயர் இயற்சொல் :– கடல், கப்பல்
2. வினை இயற்சொல் :– சென்றன, வந்தது

## இயல் ஒன்று — 1.6 மொழியை ஆள்வோம்

**கேட்க.**

**கடற்பயணம் தொடர்பான கதைகளைப் பெரியோரிடம் கேட்டு மகிழ்க.**

சார்லஸ் டார்வின் என்பவர் மனிதர்கள் குரங்கு இனத்தின் வாரிசுகள் என்று கூறினார். இதை எப்படி அவர் கண்டுபிடித்தார். அவர் இளைஞனா இருந்தப்போ பீகிள்கிற கப்பல்ல ஐந்து வருஷம் உலகத்தைச் சுற்றினார். அப்போ கிடைச்ச அனுபவ அறிவு, அறிவியல் அறிவுதான் அவருடைய கண்டுபிடிப்புகளுக்கு ஆதாரம்.

அந்தப் பயணத்தில் தனக்குக் கிடைத்த அனைத்து உயிரினங்களையும் டார்வின் ஆராய்ந்தார். உயிரினங்களின் ஒவ்வொரு பகுதியையும் உற்று நோக்கி அப்பகுதி ஏன் அப்படி இருக்கிறது என்பதற்கான காரணத்தைத் தேடினார்.

காலபகஸ் தீவுகளில் உள்ள உயிரினங்களின் உண்ணும் உணவுக்கு அலகில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் அடிப்படையில் இயற்கைத் தேர்வு, உயிரினங்களின் தகவமைப்பு, பரிணாமவியல் கொள்கை ஆகியவற்றை டார்வின் உருவாக்கினார்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பின்வரும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**<u>கப்பல்களின் வகைகளும் பயன்களும்</u>:**

**1. வர்த்தகக் கப்பல்கள்:**

பயணிகள் மற்றும் பொருட்களை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**2. கடற்படைக் கப்பல்கள் :**

இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**3. மீன்பிடி படகுகள் :**

வர்த்தகக் கப்பல்களின் ஒரு துணையாகக் குழுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

**சொல்லக்கேட்டு எழுதுக.**

1. பெருந்திரளான மக்களையும் பொருள்களையும் கப்பல்கள் ஏற்றிச் செல்லும்.
2. காற்றின் உதவியால் செலுத்தப்படுபவை பாய்மரக் கப்பல்கள்.
3. வானில் தோன்றும் விண்மீன்களின் நிலையை வைத்துத் திசையை அறிவர்.
4. ஆழ்கடல் விந்தைகளைப் பற்றி ஆய்வுகள் செய்தார்.
5. நார்வே நாட்டின் கடற்கரையில் கண் விழித்தோம்.

**அறிந்து பயன்படுத்துவோம்.**

காலம் மூன்று வகைப்படும். அவை,

1. இறந்தகாலம், 2. நிகழ்காலம், 3. எதிர்காலம்

1. நடந்த செயலைக் குறிப்பது இறந்தகாலம்.
   (எ.கா) பார்த்தான், ஆடினாள், பறந்தது.
2. நடக்கும் செயலைக் குறிப்பது நிகழ்காலம்.
   (எ.கா) பார்க்கிறான், ஆடுகின்றாள், பறக்கின்றது.
3. நடக்கவிருக்கும் செயலைக் குறிப்பது எதிர்காலம்.
   (எ.கா) காண்பான், ஆடுவாள், பறக்கும்.

**கட்டங்களை நிரப்புக.**

| வேர்ச்சொல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நட | நடந்தாள் | நடக்கிறாள் | நடப்பாள் |
| எழுது | எழுதினாள் | எழுதுகிறாள் | எழுதுவாள் |
| ஓடு | ஓடினாள் | ஓடுகிறாள் | ஓடுவாள் |
| சிரி | சிரித்தாள் | சிரிக்கிறாள் | சிரிப்பாள் |
| பிடி | பிடித்தாள் | பிடிக்கிறாள் | பிடிப்பாள் |
| இறங்கு | இறங்கினாள் | இறங்குகிறாள் | இறங்குவாள் |

**பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.**

1. அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்.

**விடை : அமுதன் நேற்று வீட்டுக்கு வந்தான்.**

2. கண்மணி நாளை பாடம் படித்தாள்.

**விடை : கண்மணி நாளை பாடம் படிப்பாள்.**

3. மாடுகள் இப்பொழுது புல் மேயும்.

**விடை : மாடுகள் இப்பொழுது புல் மேய்கின்றன.**

4. ஆசிரியர் நாளை சிறு தேர்வு நடத்தினார்.

**விடை : ஆசிரியர் நாளை சிறு தேர்வு நடத்துவார்.**

5. நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் செல்கிறோம்.

**விடை : நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் சென்றோம்.**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**பயணங்கள் பலவகை**

**முன்னுரை – பயணத்தின் தேவை – தரைவழிப் பயணம் – கடல்வழிப் பயணம் – வான்வழிப் பயணம் – முடிவுரை**

**முன்னுரை :**

★ பயணம் செய்வதில் தமிழர்களுக்கு எப்போதும் பெரு விருப்பம் உண்டு. பயணம் தரைவழிப்பயணம் – கடல்வழிப் பயணம் – வான்வழிப் பயணம் என மூன்று வகைப்படும். இவற்றைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**பயணத்தின் தேவை :**

★ மனிதர்கள், விலங்குகள், பொருட்கள் முதலியன ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு நகர்வதையே பயணம் என்கிறோம்.

★ மனிதர்களுக்கிடையில் வர்த்தகம் நடைபெறவும், நாகரிகங்களின் வளர்ச்சிக்கும் பயணத்தின் தேவை இன்றியமையாததாகும்.

**தரைவழிப் பயணம் :**

★ தரைவழிப்பயணம் என்பது பயணிகள் அல்லது பொருட்கள் சாலையில் இடம்பெயர்த்தலைக் குறிக்கிறது.

★ தரைவழிப்பயணத்தின் முதல் வகை குதிரை அல்லது காளையின் மூலம் மனிதர்களால் நடைபெற்றது.

★ பின்னர் நாகரிக வளர்ச்சியின் காரணமாகப் படிப்படியாக உயர்ந்தது இன்று பல வகையான வாகனங்கள் மூலம் நடைபெறுகிறது.

★ எங்கும் எவ்விடத்திற்கும் விரைவாக காலவிரையமின்றி பயணம் செல்லத் தரைவழிப்பயணம் பெரிதும் உதவுகிறது.

**கடல்வழிப் பயணம் :**

★ கடல்வழிப்பயணம் என்பது கப்பல்கள் அல்லது படகுகள் மூலம் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக்கடல் வழியாகச் செல்லும் போக்குவரத்தைக் குறிப்பதாகும்.

★ இந்தப் போக்குவரத்து உள் நாட்டளவில் அதிகப் பயன்பாடுகளற்றதாக இருப்பினும் பன்னாட்டளவில் மிக முக்கியப் போக்குவரத்தாக இருக்கிறது.

★ அதிகமான எண்ணிக்கையில் பயணிகள் ஒரே நேரத்தில் பயணம் செய்யலாம்.

★ எடை அதிகமாக உள்ள பொருட்களை அதிக அளவில் ஒரே நேரத்தில் எடுத்துச் செல்ல முடிகிறது.

**வான்வழிப் பயணம் :**

★ கப்பலுக்கும், ஆகாய விமானத்துக்கும் போக்குவரத்தில் போட்டி நடைபெறுகிறது என்றே சொல்லலாம்.

★ விமானப் பயணமே எல்லோராலும் விரும்பப்படுகிறது. காரணம், விமானப் பயணம் (வான்வழிப் பயணம்) விரைவாக நிகழ்கிறது.

★ பணம் அதிகமாகச் செலவானாலும் மக்கள் வான்வழிப் பயணத்தையே மேற்கொள்கின்றனர்.

★ வான்வழி மூலம் பொருள் போக்குவரத்தும், தபால் போக்குவரத்தும் நடைபெறுகின்றன.

**முடிவுரை**

★ போக்குவரத்துச் சாதனங்களும், வசதிகளும் நாளுக்கு நாள் பெருகிவருகின்றன. அது மனிதர்களின் பயணத்தை மேலும் எளிதாக்குவதோடு, சுகமாகவும் அமைகின்றன.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் ஒன்று

## 1.7 மொழியோடு விளையாடு

**குறுக்கெழுத்துப் புதிர்.**
**பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை அறிவோம்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 த | ந் | தை | | 2 அ | றி | 3 வி | ய | ல் |
| லை | | 4 தே | ர் | வு | | ய | | த |
| வ | ளை | | | | | ப் | | 5 மு |
| ர் | ட | 6 இ | | 7 தொ | | பு | | |
| | ட் | | ல் | ட | 8 உ | | | சி |
| | 9 க | 10 கு | றி | க் | கோ | ள் | | ச் |
| | | | | க | | 11 நா | | ழ் |
| ஞா | | | | ம் | | | | கி |
| 12 று | லா | ர | 13 வ | | லி | 14 ஒ | | 15 ம |

**இடமிருந்து வலம் :**
1. அச்சன்
2. விஞ்ஞானம்
4. பரீட்சை
10. லட்சியம்

**மேலிருந்து கீழ் :**
1. அதிபர்
3. ஆச்சரியம்
7. ஆரம்பம்
12. சதம்

**வலமிருந்து இடம் :**
6. அபாயம்
8. தேகம்
13. சரித்திரம்
14. சத்தம்

**கீழிருந்து மேல் :**
5. ஆதி
9. உத்தரவு
11. தினம்
15. சந்தோசம்

**குறிப்புகளைக் கொண்டு "மா" என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக.**

1. முக்கனிகளுள் ஒன்று — | மா |
2. கதிரவன்மறையும் நேரம் — | மா | லை |
3. பெருந்திரளான மக்கள் கூடும் நிகழ்வு — | மா | நா | டு |
4. எழுத்துக்களை ஒலிக்க ஆகும் கால அளவு — | மா | த் | தி | ரை |
5. அளவில் பெரிய நகரம் — | மா | ந | க | ர | ம் |

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நிற்க அதற்குத் தக.......**
**(என் பொறுப்புகள்)**

1. **கடல் மற்றும் கடற்கரையின் தூய்மை காப்பேன்.**
2. **சுற்றுச்சூழலுக்குத் தீங்கு தராத பொருள்களையே பயன்படுத்துவேன்.**
3. நீர்நிலைகளைத் தூய்மையாகப் பராமரிப்பேன்.
4. நெகிழிப் பைகளைப் பயன்படுத்தமாட்டேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

1. கலங்கரை விளக்கம் – Light house
2. பெருங்கடல் – Ocean
3. கப்பல் தொழில்நுட்பம் – Marine technology
4. கடல்வாழ் உயிரினம் – Marine creature
5. நீர்மூழ்கிக் கப்பல் – Submarine
6. துறைமுகம் – Harbour
7. புயல் – Storm
8. மாலுமி – Sailor
9. நங்கூரம் – Anchor
10. கப்பல் தளம் – Shipyard

**இணையத்தில் காண்க.**

**இந்தியக் கடற்படையில் உள்ள போர்க்கப்பல்கள் பற்றிய செய்திகளை இணையத்தின் மூலம் திரட்டுக.**

**இந்தியக் கடற்படை:**

★ இந்தியக் கடற்படை என்பது இந்திய பாதுகாப்புப் படைகளின் கப்பல் பிரிவு

★ 2013 – 2014 காலகட்டத்தில் இதில் ஏறத்தாழ இலட்சத்திற்கு அதிகமான ஊழியர்கள் உள்ளனர்.

★ இவர்களில் பாதுகாப்பு படையைச் சேராதவர்கள் 43000, அதிகாரிகள் 8700, கடற்படையினர் 50000.

★ 2008 நவம்பரில் மும்பையில் நடந்த தீவிரவாத தாக்குதலை அடுத்து "சாகர் ப்ரஹரி பல்" என்ற அமைப்பை உருவாக்கி அதில் 1000 வீரர்களும், 80 விரைவுத் தாக்குதல் கலன்களும் இருக்கும் என இந்திய அரசு நாடாளுமன்றத்தில் சூலை 2009 இல் தெரிவித்தது.

★ இந்தியக் கடற்படை 2014 ஆம் ஆண்டு மார்ச் மாத காலத்தில் 184 கலன்களைக் கொண்டிருந்தது.

★ இதில் ஐ.என்.எஸ் விராட், ஐ.என்.எஸ் விக்ரமாதித்யா ஆகியவையும் 17 நீர்மூழ்கிக் கப்பல்களும் அடங்கும்.

★ நாட்டின் கடல் எல்லைகளை காப்பதுதான் கடற்படையின் முதன்மையான நோக்கமாக இருப்பினும், இந்தியா தனது கடற்படையைப் பலவிதங்களில் பயன்படுத்துகிறது.

★ ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மூலமாக சர்வதேச உறவுகளை மேம்படுத்துதல், துறைமுகங்களைப் பார்வையிடுதல், பேரிடர் நிவாரணம் உள்ளிட்ட பல மனிதாபிமானச் செயல்பாடுகள் ஆகியவற்றையும் இவை உள்ளடக்கியுள்ளன.

★ நீலநிறக் கடற்படை என அடையாளப்படுத்திக் கொள்வதற் காகத் தனது சக்திகளைப் பெருக்கிக்கொள்ளும் நோக்கத்தோடு, இந்தியக் கடற்படை மிகப்பெரிய அளவில் நவீனத்துவத்திற்கும் விரிவாக்கத்திற்கும் தன்னை உட்படுத்திக் கொண்டிருக்கிறது.

**2. கப்பலைக்குறிக்கும் வேறு பெயர்களை இணையம் மூலம் திரட்டுக.**

கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, திமில், தெப்பம், வங்கம், மிதவை, பாய்மரக்கப்பல்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




**இயல் இரண்டு** — **2. ஒப்புரவு ஒழுகு**

**கவிதைப்பேழை**

**இயல் இரண்டு** — **2.1 புதுமைவிளக்கு**

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1." இடர் ஆழி நீங்குகவே " – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்.................**

அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம் **விடை : அ) துன்பம்**

**2. "ஞானச்சுடர் "என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது............**

அ) ஞான+சுடர் ஆ) ஞானச் + சுடர்

இ) ஞானம் + சுடர் ஈ) ஞானி + சுடர் **விடை : இ) ஞானம் + சுடர்**

**3. இன்பு + உருகு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்............**

அ) இன்பு உருகு ஆ) இன்பும் உருகு

இ) இன்புருகு ஈ) இன்பருகு **விடை : இ) இன்புருகு**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. அன்பு | – | நெய் |
| 2. ஆர்வம் | – | தகளி |
| 3. சிந்தை | – | விளக்கு |
| 4. ஞானம் | – | இடுதிரி |

**விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. அன்பு | – | விளக்கு |
| 2. ஆர்வம் | – | நெய் |
| 3. சிந்தை | – | இடுதிரி |
| 4. ஞானம் | – | தகளி |

**குறுவினா**

**1. பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர் ?**

பொய்கையாழ்வார் பூமியை அகல்விளக்காகவும் பூதத்தாழ்வார் அன்பை அகல்விளக்காகவும் உருவகப்படுத்துகின்றனர்.

**2. பொய்கை ஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார் ?**

பொய்கை ஆழ்வார் துன்பக்கடல் நீங்க வேண்டிப் பாடலால் பாமாலை சூட்டுகிறார்.

**சிறுவினா**

**பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.**

1. பூதத்தாழ்வார் அன்பை அகல் விளக்காகவும்
2. ஆர்வத்தை நெய்யாகவும்.
3. இனிமையான மனதை இடுதிரியாகவும்
4. ஞான ஒளியாகிய சுடர் விளக்கை மனம் உருக திருமாலுக்கு ஏற்றினார்.

**சிந்தனை வினா**

**பொய்கையாழ்வார் ஞானத்தை விளக்காக உருவகப்படுத்துகிறார். நீங்கள் எவற்றை எல்லாம் விளக்காக உருவகப்படுத்துவீர்கள் ?**

* பொய்கையாழ்வார் ஞானத்தை விளக்காக உருவகப்படுத்துகிறார்.
* நான் அறிவு, கதிரவன், நிலவு, கல்வியை, விளக்காக உருவகப் படுத்துவேன்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வையம் என்பதன் பொருள்.........**

அ) அறிவு ஆ) உலகம் இ) அகல்விளக்கு ஈ) திருமால் **விடை : ஆ) உலகம்**

**2. வெய்ய என்பதன் பொருள்..................**

அ) வெப்பக்கதிர்வீசும் ஆ) தென்றல் வீசும்
இ) வாடை வீசும் ஈ) மணம் வீசும் **விடை : அ) வெப்பக்கதிர் வீசும்**

**3. சொல்மாலை என்பதன் பொருள்...........**

அ) பூமாலை ஆ) சோலை
இ) பாமாலை ஈ) பொன் மாலை **விடை : இ) பாமாலை**

**4. தகளி என்பதன் பொருள்.............**

அ) பாமாலை ஆ) துன்பக் கடல்
இ) உலகம் ஈ) அகல் விளக்கு **விடை : ஈ) அகல் விளக்கு**

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ஞானம் என்பதன் பொருள்.......... **விடை : அறிவு**
2. நாரணன் என்பதன் பொருள்.......... **விடை : திருமால்**
3. **நாலாயிரத் திவ்வியபிரபந்தத்தை தொகுத்தவர்.......... ஆவார். விடை : நாதமுனி**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**குறுவினா.**

**1. அந்தாதி என்பது யாது ?**

ஒரு பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சொல்லோ அடுத்து வரும் பாடலுக்கு முதலாக அமைவதைஅந்தாதி என்பர்.

**2. நாலாயிரத்திவ்விய பிரபந்தம் என்பது யாது ?**

* திருமாலைப் போற்றிப்பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள்.
* அவர்கள் பாடிய தொகுப்பு நாலாயிரத் திவ்வியபிரபந்தம் ஆகும்.

**3. நாலாயிரத் திவ்வியபிரபந்தத்தை தொகுத்தவர் ஆவார்.**

விடை : நாதமுனி

**பொய்கை ஆழ்வார் குறிப்பு தருக.**

**பொய்கையாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் முதலாழ்வார் ஆவார்.**

* பிறந்த ஊர் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருவெஃகா
* சங்கின் அம்சமாகப் பிறந்தவர்.
* பாடியது நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள முதலாம் திருவந்தாதி.
* முதலாம் திருவந்தாதியில் 100 வெண்பாக்கள் உள்ளன.
* முதல் முதலாக திருமாலின் 10 அவதாரங்களைப் பாடியவர்.

**பூதத்தாழ்வார் குறிப்பு தருக.**

**பூதத்தாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். முதல் ஆழ்வார்கள் எனப் போற்றப்பட்ட மூன்று ஆழ்வார்களுள் ஒருவராக விளங்கினார்.**

* பிறந்த ஊர் சென்னையை அடுத்துள்ள மாகபலிபுரம்
*கதாயுதத்தின் அம்சமாக பிறந்தவர்
*பாடியது நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் உள்ள இரண்டாம் திருவந்தாதி. இதில் 100 வெண்பாக்கள் உள்ளது.
*பெருந்தமிழன் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ஆழ்வார்.

**கற்பவை கற்றபின்**

**பன்னிரு ஆழ்வார்களின் பெயர்களைத் திரட்டுக.**

| | |
|---|---|
| 1. பொய்கையாழ்வார் | 7. பெரியாழ்வார் |
| 2. பூதத்தாழ்வார் | 8. ஆண்டாள் |
| 3. பேயாழ்வார் | 9. திருமங்கையாழ்வார் |
| 4. திருமழிசையாழ்வார் | 10. தொண்டரடிப் பொடியாழ்வார் |
| 5. நம்மாழ்வார் | 11. திருப்பாணாழ்வார் |
| 6. மதுரகவியாழ்வார் | 12. குலசேகராழ்வார் |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




கவிதைப்பேழை

**இயல் இரண்டு**

## 2.2. அறம் என்னும் கதிர்

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. காந்தியடிகள் எப்போதும்..................ப் பேசினார்**

அ) வன்சொற்களை ஆ) அரசியலை

இ) கதைகளை ஈ) வாய்மையை **விடை : ஈ) வாய்மையை**

**2. " இன்சொல் "என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.......**

அ) இனிய + சொல் ஆ) இன்மை + சொல்

இ) இனிமை + சொல் ஈ) இன் + சொல் **விடை : இ) இனிமை + சொல்**

**3. அறம் + கதிர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்...............**

அ)அற கதிர் ஆ) அறுகதிர்

இ) அறக்கதிர் ஈ) அறம்கதிர் **விடை : இ) அறக்கதிர்**

**4. " இளமை " என்னும் சொல்லின் எதிர்ச்சொல்...............**

அ) முதுமை ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை **விடை : அ) முதுமை**

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **1. விளைநிலம்** | – | **உண்மை** |
| **2. விதை** | – | **இன்சொல்** |
| **3. களை** | – | **ஈகை** |
| **4. உரம்** | – | **வன்சொல்** |

**விடைகள்.**

| | | |
|---|---|---|
| 1. விளைநிலம் | – | இன்சொல் |
| 2. விதை | – | ஈகை |
| 3. களை | – | வன்சொல் |
| 4. உரம் | – | உண்மை |

**குறுவினா**

**1. அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார் ?**

அறக்கதிர் விளைய உண்மை பேசுதல் என்னும் எருவினை இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்.

**2. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது ?**

நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் வன்சொல்லை குறிப்பிடுகிறது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**சிறுவினா**

**இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை ?**

**இளம் வயதிலேயே செய்யவேண்டியன ;**

1. இனிய சொல்லை விளைநிலமாக்கி
2. ஈகை என்னும் பண்பை விதையாக விதைத்து
3. வன்சொல் என்னும் களையை நீக்கி
4. உண்மை பேசுதல் என்னும் எருவினை இட்டு.
5. அன்பை நீராக பாய்ச்சி
6. அறம் என்னும் கதிரைப் பயனாகப் பெறவேண்டும்.

**சிந்தனை வினா**

**இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கருதுகிறீர்கள் ?**

**இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் :**

* பெரியோருக்கு கீழ்படிதல்.
* ஆசிரியர் கூறுவதைக் கேட்டு நடத்தல்.
* சிறுசேமிப்பினை மேற்கொள்ளல்.
* உண்மை பேசுதல்.
* பிறர்க்கு உதவி செய்தல்.
* தினமும் வீட்டுப்பாடங்களை செய்தல்.
* உடலை சுத்தமாக வைத்திருத்தல்.
* அனைவரிடமும் அன்பாக நடத்தல்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வித்து என்பதன் பொருள்**

அ) எரு ஆ) களை
இ)நீர் ஈ) விதை **விடை : ஈ) விதை**

**2. ஈன என்பதன் பொருள்**

அ) பெற ஆ) நிலம் இ) முதுமை ஈ) விதை **விடை : அ) பெற**

**3. அறநெறிச்சாரத்தில் உள்ள பாடல்களின்**

அ) 226 ஆ) 225 இ) 218 ஈ) 214 **விடை : ஆ) 225**

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **1. நிலன்** | **–** | **பசுமையான பயிர்** |
| **2. களை** | **–** | **கடுஞ்சொல்** |
| **3. பைங்கூழ்** | **–** | **நிலம்** |
| **4. வன்சொல்** | **–** | **வேண்டாத செடி** |

**விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. நிலன் | – | நிலம் |
| 2. களை | – | வேண்டாத செடி |
| 3. பைங்கூழ் | – | பசுமையான பயிர் |
| 4. வன்சொல் | – | கடுஞ்சொல் |

**முனைப்பாடியார் குறிப்பு தருக.**

ஆசிரியர் பெயர் : முனைப்பாடியார்
பிறந்த ஊர் : திருமுனைப்பாடி
காலம் : 13ம் நூற்றாண்டு
இயற்றிய நூல் : அறநெறிச்சாரம்
சமயம் : சமணம்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கற்பவை கற்றபின்**

**1. பிறருடன் பேசும்போது நீங்கள் பயன்படுத்தும் இன்சொற்களைத் தொகுத்துக் கூறுக.**

**பிறருடன் பேசும் போது நாங்கள் பயன்படுத்தும் இன்சொற்கள் :–**

* நன்றி
* மகிழ்ச்சி
* சிறப்பு
* பரவாயில்லை
* பொறுத்துக்கொள்
* கவனமாகப்படி
* உண்மை
* நன்மை
* வெற்றி
* கடமை
* கண்ணியம்
* கட்டுப்பாடு
* பொறுமை

**2. உன் அன்னை பயன்படுத்திய இன்சொல்லால் நீ மகிழ்ந்த நிகழ்வு ஒன்றைக் கூறுக.**

ஒரு நாள் நானும் என் அன்புத் தாயும் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தோம் அப்பொழுது வாகனங்கள் அதிகமாக வந்தும் சென்றும் கொண்டிருந்தது. நாங்கள் செல்லும் வழியில் ஒரு கண்தெரியாத ஒருவர் சாலையினை கடக்க முடியாமல் நின்று கொண்டிருந்தார். அவரைக் கடந்து எண்ணற்ற மக்கள் சென்று கொண்டிருந்தனர். நான் என் அம்மாவிடம் கண்தெரியாதவரை சாலையை கடக்க வைக்கவா என்று கேட்டேன் அம்மா அதற்கு சரி என்றார். நான் அந்த கண்தெரியாதவரை சாலையினை கடக்க உதவி செய்தேன் அதற்கு என் அம்மா என் நல்ல மனதைப் பாராட்டி சிறப்பு, அன்புள்ள மனம் என்று கூறி என்னை புகழ்ந்தார்.

**உரைநடை உலகம்**

**இயல் இரண்டு** | **2.3. ஒப்புரவுநெறி**

**மனவரைபடம்**

**ஒப்புரவு நெறி**

* **வாழ்வின் குறிக்கோள்**
* **வாழ்வும் ஒப்புரவும்**
* **ஒப்புரவின் இயல்பு**
* **பொருளீட்டலும் ஒப்புரவும்**
* **ஒப்புரவின் பயன்**
* **ஒப்புரவும் கடமையும்**

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காக என்பது..............நெறி.**

அ) தனியுடைமை ஆ) பொதுவுடைமை

இ) பொருளுடைமை ஈ) ஒழுக்கமுடைமை **விடை : ஆ) பொதுவுடைமை**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**2. செல்வத்தின் பயன்................வாழ்வு.**
அ) ஆடம்பர ஆ) நீண்ட
இ) ஒப்புரவு ஈ) நோயற்ற **விடை : இ) ஒப்புரவு**

**3. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை............. என்றும் கூறுவர்.**
அ) மருந்து ஆ) மருத்துவர்
இ) மருத்துவமனை ஈ) மாத்திரை **விடை : அ) மருந்து**

**4. உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய் என்று கூறியவர்....................**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) முடியரசன் ஈ) கண்ணதாசன் **விடை : ஆ) பாரதிதாசன்**

**எதிர்ச்சொற்களைப் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. எளிது | – | புரவலர் |
| 2. ஈதல் | – | அரிது |
| 3. அந்நியர் | – | ஏற்றல் |
| 4. இரவலர் | – | உறவினர் |

**விடைகள் :–**

| | | |
|---|---|---|
| **1. எளிது** | **–** | **அரிது** |
| **2. ஈதல்** | **–** | **ஏற்றல்** |
| **3. அந்நியர்** | **–** | **உறவினர்** |
| **4. இரவலர்** | **–** | **புரவலர்** |

**தொடர்களில் அமைத்து எழுதுக.**

குறிக்கோள்.................
**விடை : மக்கள் அனைவரும் குறிக்கோளுடன் வாழவேண்டும்.**

கடமைகள்...........................
**விடை : உழைப்பதையே நம் முதல் கடமையாக கொள்ள வேண்டும்.**

வாழ்நாள்...............................
**விடை : வாழ்நாள் முழுவதும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும்.**

சிந்தித்து.........................
**விடை : மனிதன் எப்பொழுதும் சிந்தித்து செயல்பட வேண்டும்.**

**குறுவினா**

**1. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது ?**

மனித வாழ்வில் பொருளீட்டுவதைவிடவும் பெரிய செயல் அதை முறையாக அனுபவிப்பதும் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

**2. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது ?**

* பொருளீட்டும் வாழ்க்கையே சமூக வாழ்க்கைதான்

* மற்றவர்களுக்கு வழங்கி மகிழ்வித்து மகிழ, வாழ்வித்து வாழப் பொருள் தேவை என்பதே பொருளீட்டுவதன் நோக்கமாகும் எனக் குன்றக்குடி அடிகளார் கூறுகிறார்.

**சிறுவினா**

**1. ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது ?**

ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் : உதவி பெறுபவரை உறவுப்பாங்கில் எண்ணி, உரிமை உடையவராக நினைத்து உதவி செய்வதற்குப் பதில் அவரே எடுத்துக்கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு ஆகும்.

**2. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை ?**

**தலைப்பு :–**

ஊருணியை அமைத்துத் தண்ணீரைத் தேக்கும் கடமை பொறுப்புணர்வுடன் – கூட்டுப் பொறுப்புடன் செய்யப் பெற்றால்தான் ஊருணியில் தண்ணீர் நிறையும். பலரும் எடுத்துக் குடிக்கலாம். பயன்தரும் மரங்களை வளர்த்தால்தான் கனிகள் கிடைக்கும். தின்று அனுபவிக்கலாம்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இங்கும் மனிதனின் படைப்பைத் தொடர்ந்துதான் நுகர்வு வருகிறது. ஒப்புரவு வருகிறது. அதேபோல மருந்துமரங்களையும் நட்டு வளர்த்தால்தான் பயன்படுத்த முடியும். ஆதலால் ஒப்புரவாண்மையுடன் வாழ முதலில் தேவைப்படுவது உழைப்பு. கூட்டு உழைப்பு. பொருள்களைப் படைக்கும் கடமைகள் நிகழாத வரையில் ஒப்புரவு வாழ்வு மலராது. கடமைகள் இயற்றப் பெறாமல் ஒப்புரவு தோன்றாது. ஒரே வழி தோன்றினாலும் நிலைத்து நில்லாது. கடமைகளில், பொருள் செய்தலில் ஒவ்வொருவரும் கூட்டு உழைப்பில் ஈடுபட்டால் தான் ஒப்புரவு நெறி தோன்றும், வளரும், நிலைத்து நிற்கும்.

**சிந்தனை வினா**

**ஒப்புரவுக்கும் உதவி செய்தலுக்கும் வேறுபாடு யாது ?**

| ஒப்புரவு | உதவிசெய்தல் |
|---|---|
| ஒப்புரவு என்பது உதவி பெறுபவர் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஆகும். | உதவி செய்தல் என்பது தற்காப்புக்காகவும், இலாபத்திற்காகவும் செய்வது ஆகும். |
| வள்ளல்கள் இல்லை.வாங்குபவரும் இல்லை | உதவுபவரும் உதவி பெற்றவரும் உண்டு. |
| கடமைகள், உரிமைகளை வழங்குகின்றன. | உதவி செய்பவரின் மனப்பாங்கு, உணர்வு அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகிறது. |

**கற்பவை கற்றபின்**

**பிறருக்காக உழைத்துப் புகழ்பெற்ற சான்றோர்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி வந்து வகுப்பறையில் பகிர்க.**

**அ) அன்னை தெரசா :**

அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவரும் இந்தியக்குடியுரிமை பெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார். 1950 ஆம் ஆண்டு இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார். நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழை எளியோர்களுக்கும், நோய் வாய்ப்பட்டடோருக்கும் அனாதைகளுக்கும் இறக்கும் தருவாயிலிருப்போருக்கும் தொண்டாற்றியவர் இவர். 1970ம் ஆண்டுக்குள் இவர் சிறந்த சமூக சேவகர் எனவும், ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் பரிந்து பேசுபவர் என்றும் உலகம் முழுவதும் புகழப்பட்டவர். இவர் 1979 இல் அமைதிக்கான நோபல் பரிசினையும் 1980 இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதினையும் பெற்றார். அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை அவரது இறப்பின் போது 123 நாடுகளில் 610 தொண்டு நிறுவனங்களை இயக்கிக்கொண்டிருந்தது.

இதில் எய்ட்ஸ் தொழுநோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அனாதை இல்லங்கள் பள்ளிக்கூடங்கள் ஆகியவை அடங்கும்.

**ஆ) வள்ளலார் :**

தமது மனித நேயச் செயல்பாடுகளால் மக்கள் உள்ளங்களில் நீங்கா இடம் பெற்ற சான்றோர்களில் ஒருவர் வள்ளலார். மக்களின் பசிப்பிணியை நீக்க வடலூரில் சத்திய தருமச்சாலையைத் தொடங்கி எல்லோருக்கும் உணவளித்தார்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



விரிவானம்

இயல் இரண்டு

## 2.4. உண்மை ஒளி

### மதிப்பீடு

**" உண்மை ஒளி " படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.**

**உண்மை ஒளி**

அழகான ஒரு கிராமத்தில் ஜென் குரு ஒருவர் மாணவர்களுக்கு பாடம் கற்பித்துக் கொண்டிருந்தார் அப்போது மாணவர்களை நோக்கி ஜென் குரு குழந்தைகளே! உண்மையான ஒளி எது என்று அறிய ஆவலாக உள்ளீரா ? என்று வினவினார்.

மாணவர்களும் ஆர்வமாக உள்ளோம் என்றனர். ஆசிரியர் இரவும் பகலும் மாறி மாறி வருவது போல வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் என்றார். பிறகு மாணவர்களே இருள் கலந்து வெளிச்சம் வந்துவிட்டது என்பதை எந்த நொடியில் நீங்கள் அறிவீர்கள் ? என்று கேட்டார்.

மாணவர்களுள் ஒருவன் தொலைவில் நிற்கும் விலங்கு குதிரையா ? கழுதையா ? என்பதை அடையாளம் காணக்கூடிய நொடியில் வெளிச்சம் வந்துவிட்டதை நான் அறிவேன் என்றான் மற்றொரு மாணவன் தூரத்திலிருக்கும் மரம் ஆலமரமா ? அரசமரமா ? என்பதை அடையாளம் காணக்கூடிய நேரத்தில் உண்மையாக விடிந்து விட்டது என்பதை அறியலாம் என்றான். குரு இருவர் கூறியதும் இல்லை என்று வேறு யாருக்காவது தெரியுமா ?
என்றார் மாணவர்கள் தெரியவில்லை நீங்களே கூறுங்கள் என்றனர்.

ஒரு மனிதரைக் காணும்போது இவர் என் உடன்பிறந்தவர் என்று எப்போது நீங்கள் உணர்கிறீர்களோ அப்போது தான் உண்மையான ஒளி உங்களுக்குள் ஏற்படுகிறது என்று பொருள் என்றார். மாணவர்கள் அனைவரும் உண்மையான ஒளியை புரிந்து கொண்டோம் என்று வகுப்பை முடிந்து கலைந்து சென்றனர்.

வகுப்பறையில் இருந்து குரு அருகில் உள்ள சிற்றூருக்கு குதிரையில் புறப்படுகிறார். வழியில் யாரோ சாலையோரம் படுத்துக்கிடப்பதைக் கண்டு அவர் மயங்கியிருக்கிறார் என எண்ணி அருகில் சென்று அவரை எழுப்புகிறார். அவனுக்கு பருக நீர் தருகிறார். அவனைத் தன் குதிரையின் மீது உட்கார வைக்கிறார் குதிரையில் அமர்ந்தவன் குதிரையை அடித்து விரட்டத் தொடங்குகிறான். குரு ஏமாற்றத்துடன் நடந்து ஊரை அடைகிறார்.

ஊரை அடைந்த குரு ஒரு குதிரைச் சந்தைக்குச் செல்கிறார். அங்கு குருவை ஏமாற்றியவன் குதிரையுடன் இருப்பதைக் கண்டு அவனிடம் சென்று குழந்தாய்! காட்டில் நடந்த நிகழ்வை யாரிடமும் சொல்லிவிடாதே என்றார். அதற்கு அவன் இவர் ஏமாந்ததை யாரிடமும் சொல்லக் கூடாது என நினைக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருந்தான். அவன் நினைப்பை உணர்ந்த குரு குழந்தாய் நீ நினைப்பது எனக்குப் புரிகிறது. நான் ஏமாந்து போனது தெரிந்தால் எதிர்காலத்தில் உண்மையிலேயே யாராவது சாலையில் மயங்கிக்கிடந்தால் கூட அவர்களுக்கு யாரும் உதவமாட்டார்கள் என்றார். அந்த திருடன் அப்போதுதான் தான் செய்த தவறை உணர்ந்து வெட்கித் தலைகுனிந்தான்.

---

### கற்பவை கற்றபின்

**1. ஜென் கதைகளில் வேறு சிலவற்றை அறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க.**

**சிரிக்கும் புத்தர்.**

**கதை ஒன்று :**

புகழ்பெற்ற துறவி அவர். ஒரு நாள் அந்தத் துறவியின் பழைய மாணவர் ஒருவர் அவரைப்பார்க்க வந்தார். அவர் குருவே எனக்கு ஒரு குழப்பம் நான் உங்களிடம் படித்த தியானத்தை முறையாகத்தான் செய்கிறேன். அவை எனக்கு மிகுந்தமன அமைதியையும் புத்திக்கூர்மையையும் தருகின்றன. அதை அனுபவபூர்வமாக உணர்கிறேன். நான் தியானத்தில் இல்லாத வேளைகளில் நான் நல்லவனாக இருக்கிறேனா என்ற சந்தேகம் வருகிறது. சில நாள்களில் சில தவறுகளைச் செய்கிறேன். இதற்கு என்ன தீர்வு என்றார். அதற்கு குரு நீ தினமும் தியானம் செய், தினமும் தவறு செய் சில நாள்களில் இதில் ஏதேனும் ஒன்று நின்றுவிடும் என்று கூறினார்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

அதற்கு அவர் ஒரு வேளை தவறு நிற்பதற்குப்பதில் தியானம் நின்றுவிட்டால் என்ன செய்வது என்று கேட்டார். அதற்கு குரு அதன் மூலம் உன்னுடைய இயல்பு எது என்று புரிந்துவிடும் என்றார்.

**கதை இரண்டு :**

இரண்டு நண்பர்கள் சுற்றுலா சென்றனர். அப்பொழுது இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு ஒருவன் மற்றொருவனை கன்னத்தில் அறைந்தான். அறை வாங்கியவன் மணலில் என் நண்பன் என் கண்ணத்தில் அறைந்தான் என எழுதினான். பின் இருவரும் நடந்து சென்றனர் அப்பொழுது அறை வாங்கியவன் வழியில் உள்ள குளத்தில் தவறி விழுந்தான். உடனே அறைந்தவன் அவனை குளத்தில் இருந்து காப்பாற்றினான். அறை வாங்கியவன் அருகில் இருந்த ஒரு பாறையில் என் நண்பன் என் உயிரைக் காப்பாற்றினான் என சிறுகல்லால் பொறித்தான் அறைந்தவன் ஏன் இவ்வாறு செய்தாய் என கேட்டான். அதற்கு அவன் யாராவது நம்மைகாயப்படுத்தினால் அதை மணலில் எழுதுவிடு மன்னிப்பு என்னும் காற்று அதை அழித்து விடும். நல்லது செய்தால் அதை கல்லில் எழுது. காலத்தைத் தாண்டி அது நிலைத்திருக்கும்.

---

**2. உண்மை ஒளி படக்கதையை வகுப்பறையில் நாடகமாக நடித்துக் காட்டுக.**

**உண்மை ஒளி**

**காட்சி –1.**

**பங்குபெறுவோர் : – குரு, மாணவர்கள்**

**இடம் : மரத்தடியில்**

மாணவர்கள் : குருவிற்கு காலை வணக்கம் !

குரு : அனைவருக்கும் வணக்கம் குழந்தைகளே ! உண்மையான ஒளி எது ? என்பதைப் பற்றி இன்று அறிந்து கொள்ளப் போகிறோம்.

மாணவர்கள் : அறிந்து கொள்ள ஆவலாக உள்ளோம் ஐயா !

குரு : பிறப்பின் அடிப்படையில் எல்லா உயிரும் ஒன்றே பசி, தாகம், துக்கம் ஆகியவை எல்லா உயிர்களுக்கும் உண்டு. மேலும் இரவும் பகலும் மாறி மாறி வருவது போல வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். மாணவர்களே ! தற்போது உங்களை ஒரு கேள்வி கேட்கட்டுமா ?

மாணவர்கள் : கேளுங்கள் குருவே ! விடைகூற ஆவலாக உள்ளோம்.

குரு : இருள் கலைந்து வெளிச்சம் வந்துவிட்டது என்பதை எந்த நொடியில் நீங்கள் அறிவீர்கள் ?

மாணவன் 1: தொலைவில் நிற்கும் விலங்கு குதிரையா ? கழுதையா ? என்பதை அடையாளம் காணக்கூடிய நொடியில் வெளிச்சம் வந்துவிட்டதை நான் அறிவேன் ஐயா.

மாணவன் 2: தூரத்திலிருக்கும் மரம் ஆலமரமா ? அரசமரமா ? என்பதை அடையாளம் காணக்கூடிய நேரத்தில் உண்மையாக விடிந்து விட்டது என்பதைஅறியலாம் சரிதானே ஐயா ?

குரு : இல்லை வேறு யாருக்காவது தெரியுமா ?

மாணவர்கள் : எங்களுக்குத் தெரியவில்லை ஐயா தாங்களே கூறி விடுங்கள்.

குரு : ஒரு மனிதரைக் காணும்போது இவர் என் உடன்பிறந்தவர் என்று எப்போது நீங்கள் உணர்கிறீர்களோ ! அப்போது தான் உண்மையான ஒளி உங்களுக்குள் ஏற்படுகிறது என்பது பொருள்.

மாணவர்கள் : உண்மையான ஒளியை நாங்கள் புரிந்து கொண்டோம் ஐயா.

குரு : உள்ளுக்குள் ஒளி இல்லையென்றால் உச்சி வெயில்கூடக் காரிருளே என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் மீண்டும். நாளை சந்திப்போம்.

**காட்சி –2**

**பங்குபெறுவோர் : குரு, திருடன்**

**இடம் : காட்டு வழி**

**(குரு குதிரையில் காட்டு வழியில் ஒரு சிற்றூருக்குச் செல்கிறார்)**

குரு : வழியில் ஒருவன் படுத்திருப்பதைக் கண்டு குதிரையிலிருந்து கீழிறங்குகிறார் அவன் அருகில் வந்து குழந்தாய் நீ யார் என்று கேட்டார்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



திருடன்: மயக்கமான நிலையில் படுத்திருந்தான்.
குரு: தண்ணீர் கொடுத்து அவன் மயக்கத்தைப் போக்கினான்.
திருடன்: மெதுவாக எழுந்து சிற்றூர் செல்ல வேண்டும் என்றார்.
குரு: அவனை குதிரையின் மீது அவர் அமரச் செய்தார்.
திருடன்: குதிரையில் அமர்ந்தவுடன் குதிரையை விரைவாக செலுத்தினான்.
குரு: ஏமாற்றத்துடன் சிற்றூருக்கு நடந்து சென்றார்.

**காட்சி – 3**

**இடம் : குதிரைச் சந்தை**
**பங்குபெறுவோர் : குரு, திருடன்**
**(குரு சிற்றூரிலிருந்து குதிரைவாங்க குதிரைச் சந்தைக்குச் சென்றார் அங்கு திருடன் நின்று கொண்டு இருந்தான்)**

குரு: திருடனை கண்டு அவன் அருகில் சென்று காட்டில் நடந்ததை யாரிடமும் கூறாதே என்றார்.
திருடன்: மனதில் குருவிற்கு அசிங்கமாக இருக்கும் என்று நினைத்தான்.
குரு: அவன் மனதில் நினைத்ததை அறிந்த குரு அவனிடம் நான் அசிங்கப்படுவேன் என்று கூறவில்லை. இது மற்றவருக்குத் தெரிந்தால். எதிர்காலத்தில் உண்மையிலேயே யாராவது சாலையில் மயங்கிக் கிடந்தால் கூட அவர்களுக்கு யாரும் உதவ முன்வர மாட்டார்கள் புரிகிறதா ?
திருடன்: குருவின் பெருந்தன்மையை உணர்ந்த அவன் வெட்கித் தலைகுனிந்தான்.

**கற்கண்டு**

**இயல் இரண்டு** **2.5. அணி இலக்கணம்**

**மனவரைபடம்**

**அணி**

**உருவக அணி** **ஏகதேச உருவக அணி**

**மதிப்பீடு**

**குறுவினா.**

**1. உருவக அணியை விளக்குக.**

உவமை வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும்.

**2. உருவக அணிக்கும் ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது ?**

| உருவக அணி | ஏகதேச உருவக அணி |
|---|---|
| உருவக அணியில் இரண்டு பொருள்களுமே உருவகப்படுத்தப்படும் | ஏகதேச உருவக அணியில் இருபொருள்களில் ஒன்றை மட்டுமே உருவகப்படுத்தப்படும். |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**கற்பவை கற்றபின்**

**உவமைத் தொடர்களை எழுதி அவற்றை உருவகங்களாக மாற்றுக.**
**(எ.கா.) மலர் போன்ற முகம் – முகமலர்.**

| | உவமைத்தொடர் | உருவகத் தொடர் |
|---|---|---|
| 1. | மலர் போன்ற அடி | அடிமலர் |
| 2. | மலர் போன்ற கண் | கண்மலர் |
| 3. | தேன் போன்ற மொழி | மொழிந்தேன் |
| 4. | தாமரை போன்ற முகம் | முகத்தாமரை |
| 5. | மலர்க்கை | கைமலர் |
| 6. | மலர் போன்ற தாள் | தாள்மலர் |
| 7. | அமுதம் போன்ற மொழி | அமுதமொழி |
| 8. | அன்னை போன்ற தமிழ் | தமிழன்னை |

## இயல் இரண்டு — 2.6. மொழியை ஆள்வோம்

**கேட்க.**

**நீதிக்கதைகளைக் கேட்டு மகிழ்க.**

ரோமாபுரியில் ஓர் அடிமை தன் முதலாளியிடம் இருந்து விட்டுத் தப்பிக்க காட்டுக்குள் ஓடிவிட்டான். அவன் காட்டில் இருந்தபோது, ஒரு சிங்கம் நொண்டிக் கொண்டே அவன் பக்கத்தில் வந்து காலைத் தூக்கிக் காட்டியது.

அடிமை கொஞ்சமும் பயப்படமால், அதன் காலைப் பிடித்துப் பார்த்தான். அதில் ஒரு முள் தைத்து இருந்தது. அதைப் பிடுங்கி எறிந்து காலைத் தடவிக் கொடுத்தான். வலி நீங்கிய சிங்கம் காட்டுக்குள் ஓடி மறைந்தது.

சிறிது காலத்திற்குப் பிறகு, காட்டிலிருந்த அந்த அடிமையைப் பிடித்து, அக்கால வழக்கப்படி அவனுக்கு மரண தண்டனை கொடுத்தார்கள்.

ஒரு சிங்கத்தைப் பல நாட்கள் பட்டினி போட்டு, மரண தண்டனைக்குள்ளானவன் மீது அதை ஏவி விட்டு, அவனைக் கொல்வது தான் அக்காலத்தில் மரண தண்டனை நிறைவேற்றும் முறையாக இருந்தது.

அதே போல, அந்த அடிமை மீது சிங்கத்தை ஏவினார்கள். சிங்கம் வேகமாக அவனை நோக்கிப் பாய்ந்து வந்தது. அவனருகில் வந்ததும் சற்றே தயங்கி நின்றது அவனை உற்றுப் பார்த்தது.

முன்னொரு காலத்தில் தன் காலில் குத்திய முள்ளை எடுத்துவிட்டவன் தான் அவன் என்பதை அறிந்ததும், நாய் போல நின்று விட்டது. அடிமையும் அந்தச் சிங்கத்தை அடையாளம் கண்டுகொண்டு. அதைத் தடவிக் கொடுத்தான்.

இந்தக் காட்சியைக் கண்டதும் அரசனும் அங்கு கூடியிருந்த மக்களும் ஆச்சரியப்பட்டனர்.

சிங்கம் ஏன் அவனை அடித்துக் கொல்லவில்லை என்ற விவரத்தை அந்த அடிமை எல்லோருக்கும் சொன்னான்.

இதைக் கேட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்த அரசன், அந்த அடிமையை விடுதலை செய்து, சிங்கத்தையும் காட்டில் கொண்டு போய் விட்டுவிடுமாறு உத்தரவிட்டான்.

**நீதி : ஒருவர் செய்த உதவியை எப்பொழுதும் மறக்க கூடாது.**

**பேசுக.**

**நீதிக்கதை ஒன்றை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.**

இறைவன்பற்று கொண்ட புழுஒன்றும், இறைவன் பற்றில்லாத புழு ஒன்றும் நண்பர்களாக இருந்தன. இறைப்பற்றில்லாத புழு இறைப்பற்றுள்ள புழுவை அடிக்கடி கேலி செய்து வந்தது. ஏனெனில் அது அதிகாலையில் எழுந்து இரையை தேடிச்செல்லும். ஒரு நாள் அதிகாலை எழுந்த அப்புழு இறைவனை

www.Padasalai.Net www.TrbTnpsc.com



வணங்கி விட்டு இரையை தேடிச்சென்றது. அப்பொழுது இறைப்பற்றுள்ள காகம் ஒன்று அதிகாலையில் இறைவனை வணங்கி விட்டு இரையைதேடி வந்தது. அந்நிலையில் அப்புழு அதன் கண்களுக்குத்தெரிய அப்புழுவை கொத்தித்தின்றது. அதனைக் கண்டு மற்றொரு புழு சிரித்தது. மறுநாள் அப்புழு மிக மெதுவாக எழுந்து இரைத் தேடிச்சென்றது. அதுபோலவே இறைப்பற்றில்லாத காகம் ஒன்று இரையைத் தேடிவந்தது. அப்பொழுது அப்புழுவைக்கண்டு அதனை கொத்தித் தின்றது.

**சொல்லக் கேட்டு எழுதுக.**

1. பொய்கையாழ்வார் திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தார்.
2. இனிய சொல்லையே விளைநிலமாகக் கொள்ள வேண்டும்.
3. வாழ்க்கை குறிக்கோள் உடையது.
4. செல்வத்துப் பயன் ஒப்புரவு வாழ்க்கை.
5. உவமையும் உவமேயமும் ஒன்றாக அமைவது உருவக அணி.

---

**அறிந்து பயன்படுத்துவோம்.**

ஏதேனும் ஒன்றை அறிந்துகொள்வதற்காக வினவப்படுவது வினாவாகும். வினா கேட்கப் பயன்படுத்தும் சொற்கள் வினாச் சொற்கள் எனப்படும்.

எது, என்ன, எங்கு, எப்படி, எத்தனை, எப்பொழுது, எவற்றை, எதற்கு, ஏன், யார், யாது, யாவை போன்றன வினாச்சொற்கள் ஆகும்.

**சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.**

1. நெல்லையப்பர் கோவில்.............உள்ளது ? **விடை : எங்கு**
2. முதல் ஆழ்வார்கள் ...............பேர் ? **விடை : எத்தனை**
3. ............சொற்களைப் பேச வேண்டும். ? **விடை : எப்படிப்பட்ட**
4. அறநெறிச் சாரம் பாடலை எழுதியவர் ........... ? **விடை : யார்**
5. அறநெறிச் சாரம் என்பதன் பொருள்............. ? **விடை :யாது**

---

**பின்வரும் தொடரைப் படித்து வினாக்கள் எழுதுக.**

**பூங்கொடி தன் தோழியுடன் திங்கட்கிழமை காலையில் பேருந்தில் ஏறிப் பள்ளிக்குச் சென்றாள்.**

**(எ.கா.) பூங்கொடி பள்ளிக்கு எப்படிச் சென்றாள் ?**

1 பூங்கொடி யாருடன் பள்ளிக்கு சென்றாள் ?
2. பூங்கொடி எப்பொழுது பள்ளிக்கு சென்றாள் ?
3. பூங்கொடி எந்தக் கிழமையில் பள்ளிக்கு சென்றாள் ?

---

**தலைப்புச் செய்திகளை முழு சொற்றொடர்களாக எழுதுக.**

**(எ.கா.) தலைப்புச் செய்தி : தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடக்கம் – வானிலை மையம் அறிவிப்பு.**

**தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கி உள்ளது என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.**

1. சாலையில் கிடந்த பணத்தை உரியவரிடம் ஒப்படைத்த மாணவன் – மாவட்ட ஆட்சியர் பாராட்டு.

**விடை : சாலையில் கிடந்த பணத்தை உரியவரிடம் ஒப்படைத்த மாணவனை மாவட்ட ஆட்சியர் பாராட்டினார்.**

2. தமுக்கம் மைதானத்தில் புத்தகக் கண்காட்சி தொடக்கம்– மக்கள் ஆர்வத்துடன் வருகை.

**விடை : தமுக்கம் மைதானத்தில் புத்தகக் கண்காட்சி தொடங்கியது மக்கள் ஆர்வத்துடன் வருகைதந்தனர்.**

3. தேசிய அளவிலான கைப்பந்துப் போட்டி – தமிழக அணி வெற்றி.

**விடை : தேசிய அளவிலான கைப்பந்துப் போட்டியில் தமிழக அணி வெற்றி பெற்றது.**

4. மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி – ஏழாம் வகுப்பு மாணவி முதலிடம்.

**விடை : மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியில் ஏழாம் வகுப்பு மாணவி முதலிடம் பெற்றாள்.**

5. மாநில அளவிலான பேச்சுப்போட்டி – சென்னையில் இன்று தொடக்கம்.

**விடை : மாநில அளவிலான பேச்சுப்போட்டியானது சென்னையில் இன்று தொடங்குகிறது.**

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கட்டுரை எழுதுக.**

**ஒற்றுமையே உயர்வு**

**முன்னுரை : –**

கூடிவாழ்வது மனிதனின் இயல்பு மட்டுமன்று, இன்றியமையாத தேவையும் கூட. கூடி வாழ்ந்தால் நன்மைகள் கோடி உண்டு என்று அறிந்த பின்னரும். ஒன்றுபட்டுக் கூடிவாழத் தயங்குவதேன் ?

**இயற்கை தரும் பாடம் :–**

தேங்காய் நார்கள் ஒன்று சேர்ந்து கயிறாக உருப்பெற்றுப் பயன்படுகின்றதே ! வலிமை மிக்க யானைகள் கூடியே வாழ்கின்றன. சாரை சாரையாய் ஊர்ந்து செல்லும் எறும்புக் கூட்டமும், பூக்கள் தோறும் பறந்து சென்று தேனைக் கொண்டு கூடுகளில் சேர்க்கும் தேனீக்களும் நமக்கு உணர்த்தும் உண்மை என்ன ? ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பது தானே !

**பழமொழிகளும் கதைகளும்,**

" ஒற்றுமையே பலம் " " கூடித்தொழில் செய் "

" ஊருடன் கூடி வாழ் " " தேசத்தோடு ஒத்துவாழ் " என்னும் மொழிகள் ஒன்றுபட்ட வாழ்வின் நன்மைகளை உணர்த்துகின்றன. " கூடி விளையாடுபாப்பா " எனக் குழந்தைக்குப் பாரதியார் அறிவுறுத்துகிறார். நான்கு எருதுகளும் சிங்கமும் புறாக்களும் வேடனும், என்னும் கதைகள் நாம் அறிந்தனவே அவை போதிக்கும் உண்மை கூடிவாழ்வதால் நன்மை உண்டு என்பது தானே.

**படிப்பினைகள் :**

பண்டைத் தமிழ் மன்னர்களிடம் ஒற்றுமைக் குறைவு இருந்ததால் வேற்று இனத்தவரின் ஆட்சிக்கு தமிழகம் உட்பட்டது. பாரதம் எண்ணற்ற சிற்றரசுகளாய்ப் பிரிந்து நின்றமையால் தான் அந்நியர்க்கு அடிமையானோம். பின்னர் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு போராடியதால் விடுதலை அடைந்தோம்.காலம் காட்டும் படிப்பினைகளை மறந்து விடலாமா ? நம்மிடையே ஒற்றுமையைப் பிளந்து விடலாமா ?

**கூடிவாழ வழி :**

நமது ஒன்றுபட்ட வாழ்வுக்குத் தடைக்கற்கள் சாதியும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் ஆகும். மனிதரை நேசிக்க கற்றுக் கொள்வோம் மனிதரிடம் அன்பு செலுத்துவோம். தீண்டாமைப் பேயை விரட்டுவோம். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய தத்துவங்களைப் போற்றுவோம்.

**முடிவுரை :**

நம்மிடையே தோன்றும் கருத்து வேறுபாடுகள் ஒற்றுமைக்கு ஊறு விளைவித்தல் கூடாது.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே – நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் – தாழ்வே**
**நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த**
**ஞானம் வந்தால் பின் நமக்கெது வேண்டும் ?**

அமரகவி பாரதியாரின் அறை கூவலை ஏற்போம். கூடி வாழ்வோம், கோடி நலன் பெறுவோம்.

## இயல் இரண்டு — 2.7. மொழியோடு விளையாடு

**கீழ்க்காணும் படங்கள் சார்ந்த சொற்களை எழுதுக.**



**(எ.கா.) கரும்பலகை, வகுப்பறை, கதவு, சாளரம், கொடிமரம், மரம்,**



**(எ.கா.) மரம், நடைபாதை, பூங்கா, விளையாட்டு உபகரணம், மணல், இருக்கை**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் பயன்படுத்தித் தொடர்கள் உருவாக்குக.**
**(விதை, கட்டு, படி, நிலவு, நாடு, ஆடு)**

(எ.கா.) விதை
- விதைநெல் வாங்கினான்.
- சோளம் விதைத்தான்.

கட்டு
- கட்டிடம் அழகாக உள்ளது
- கொத்தனார் வகுப்பறையைக் கட்டினார்

படி
- படி ஏறினான்.
- தேர்வுக்கு நன்றாகப் படிப்பேன்

நிலவு
- நிலவு அழகாக இருக்கும்
- கோடைகாலத்தில் வறட்சி நிலவியது

நாடு
- நாடு சிறக்க பாடுபடுவேன்
- வெற்றிக்கான வழிவகையை நாடினேன்.

ஆடு
- ஆடு புல்லை மேய்ந்தது
- மேடையில் சிறப்பாக நடனம் ஆடினான்.

**நிற்க அதற்குத் தக...**

**என் பொறுப்புகள்......**
**1. எந்தச் சூழ்நிலையிலும் இனிய சொற்களையே பேசுவேன்.**
**2. அனைவரிடமும் மரியாதையுடன் நடந்து கொள்வேன்.**
**3. என் வாழ்வில் எளிமையைக் கடைப்பிடிப்பேன்.**
**4. திருக்குறள் கூறும் ஒப்புரவு நெறியைப் பின்பற்றி நடப்பேன்.**

**கலைச்சொல் அறிவோம்.**

| | | |
|---|---|---|
| குறிக்கோள் | – | Objective |
| செல்வம் | – | Wealth |
| லட்சியம் | – | Ambition |
| பொதுவுடைமை | – | Communism |
| கடமை | – | Responsiblity |
| அயலவர் | – | Neighbour |
| வறுமை | – | Poverty |
| ஒப்புரவுநெறி | – | Reciprocity |
| நற்பண்பு | – | Courtesy |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**இணையத்தில் காண்க.**

**அறக்கருத்துகளைக் கூறும் நூல்களின் பெயர்களை இணையத்தில் தேடித் தொகுக்க.**

**திருக்குறள் :**

ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, அறநெறிச்சாரம், வெற்றிவேற்கை, நீதி நெறி விளக்கம், நன்னெறி, விவேக சிந்தாமணி,

**நாலடியார் :**

நான்மணிக்கடிகை, பழமொழி, நானூறு, முதுமொழிக் காஞ்சி, திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, சிறுபஞ்ச மூலம், ஏலாதி,


---

**வாழ்வியல்**

**இயல் இரண்டு**

## 2.8. திருக்குறள்

**மனவரைபடம்**




---

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ..............ஒரு நாட்டின் அரணன்று.**

அ) காடு ஆ) வயல் இ) மலை ஈ) தெளிந்த நீர் **விடை : ஆ) வயல்**

**2. மக்கள் அனைவரும்................ஒத்த இயல்புடையவர்கள்.**

அ) பிறப்பால் ஆ) நிறத்தால்
இ) குணத்தால் ஈ) பணத்தால் **விடை : அ) பிறப்பால்**

**3. "நாடென்ப" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.......**

அ) நான் + என்ப ஆ) நா + டென்ப
இ) நாடு + என்ப ஈ) நாடு + டென்ப **விடை : இ) நாடு + என்ப**

**4. கண் + இல்லது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்...............**

அ) கணிஇல்லது ஆ) கணில்லது
இ) கண்ணில்லாது ஈ) கண்ணில்லது **விடை : ஈ) கண்ணில்லது**

---

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பின்வரும் குறட்பாக்களில் உவமையணி பயின்றுவரும் குறளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
   செய்தொழில் வேற்றுமை யான்.
2. வினையான் வினையாக்கிக் கோடல் தனைகவுள்
   யானையால் யானையாத் தற்று.
3. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
   மிக்காருள் மிக்க கொளல்.

**விடை : உவமையணி**

**வினையான் வினையாக்கிக் கோடல் தனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று**

---

**குறுவினா**

**1. ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும் ?**

**ஒரு செயலைச் செய்ய ஆராயவேண்டியவை**

1. வேண்டிய பொருள் 2. ஏற்ற கருவி 3. தகுந்த காலம்
4.மேற்கொள்ளும் செயலின் தன்மை 5. உரிய இடம்.

---

**2. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும் ?**

**ஒரு நாட்டுக்கு அரண்களாக அமைபவை**

1. தெளிந்த நீர்
2. நிலம்
3. மலை
4. அழகிய நிழல் உடைய காடு

---

**3. சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை ?**

பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம்தரும் நாடே சிறந்த நாட்டின் இயல்புகளாகும் என வள்ளுவர் கூறுகிறார்.

---

**படங்களுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.**



**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
**காடும் உடையது அரண்.**







**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு.**

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

# செலக்சன்

**எங்கள் வெளியீடுகள் :**

3,4,5,6,7,8 - வகுப்புகளுக்கு
5 in 1 ( TM & EM )

6,7,8,9,10 - வகுப்புகளுக்கு
தமிழ், ஆங்கிலம்
முப்பருவம்

6,7,8,9,10 - வகுப்புகளுக்கு
கணக்கு, அறிவியல், சமூக அறிவியல்
முப்பருவம் - ( TM & EM )

(6,7,8) (9,10) - வகுப்புகளுக்கு
தமிழ் கட்டுரைக் கனிகள்

10 & 12 - வகுப்புகளுக்கு
வினா வங்கி ( TM & EM )

**அன்பு நிலையம்**
மதுரை – 625001